வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 18.01.2023 புதன்கிழமை இதழ் : 40 பக்கங்கள் : 16




# கடன் மறுசீரமைப்புக்கு சீனா, இந்தியா அனுமதி!



## பேச்சுகள் வெற்றி என்கிறார் ஜனாதிபதி

● மருந்துக்காக ரூ. 5 ஆயிரம் கோடி நிலுவை

கொழும்பு, ஜன. 18

**கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா மற்றும் சீனாவின் இணக்கப்பாட்டை பெறுவதற்காக நடத்தப்படும் பேச்சுகள் வெற்றியளித்துள்ளன. மக்கள் நலனுக்காக புதிய அரசியல் பயணத்தை தொடங்குவோம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் அறிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை ஆற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், எமது பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம். கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தற்போது எமக்கு இந்தியா மற்றும் சீனாவுடன் இணக்கப்பாட்டை எட்ட வேண்டி மட்டுமே உள்ளது. அது தொடர்பான பேச்சுகளை நாம் முன்னெ

15

## தமிழ் மொழிமூல பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடம் நிரப்பப்படும்!

### கல்வி அமைச்சர் சுசில்

கொழும்பு, ஜன. 18

நாடளாவிய ரீதியிலுள்ள தமிழ் மொழி மூலமான பாடசாலை ஆசிரியர்களின் வெற்றிடங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று

15

## தாக்குதலுக்கு கண்டனம்!

யாழ்ப்பாணம், ஜன. 18

பெண்கள், சிறுவர்கள், மதத்தலைவர்கள் மற்றும் மாணவர்கள்மீதான இராணுவத்தினரின் வன்முறை தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக மத தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்

15

## இனப் பிரச்னை தீர்வு பேச்சு; மத்தியஸ்தம் அவசியமானது!

### தமிழ் சிவில் சமூகம் விசேட அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

இனப் பிரச்னைக்கான தீர்வு பேச்சில் இந்தியா போன்ற சர்வதேச சக்திகளை மத்தியஸ்தம் வகிக்க அழைக்க வேண்டும். இதுபோன்று மனச்சாட்சியுள்ள சில நாடுகளை பார்வையாளராகவும் உள்ளீர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி 11 முக்கிய அம்சங்களை உள்ளடக்கி தமிழ் சிவில் சமூகம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துடனான பேச்சில் தமிழ்த் தரப்புகளின் பொறுப்புப் பற்றி தமிழ் சிவில் சமூகத்தவர்களின் கரிசனைகள் என்ற பெயரில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் 27 சிவில் சமூக அமைப்புகள், 551 சிவில்

15

## யாழ். மாநகர முதல்வர் தெரிவு;

## தமிழரசின் கூட்டம் இணக்கமின்றி முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். மாநகர சபையில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள முதல்வர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக யாரை நிறுத்துவது என்பது தொடர்பாக இடம்பெற்ற கூட்டம் இணக்கமின்றி நேற்று முடிவடைந்தது.

இந்நிலையில், இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு மீண்டும் கூட்டத்தைக் கூட்டி முதல்வர் தொடர்பாக தீர்மானம் எடுக்க முடிவெடுக்கப்படவுள்ளது.

அடுத்த இரண்டு மாதங்

15

## தேர்தலை பிற்போட்டால் வீதிக்கு இறங்குவோம்!

### எதிர்க்கட்சிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 18

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு ஒத்திப்போட்டால் அதற்கு எதிராக பெருமளவு மக்களை வீதியில் இறக்கிப் போராடுவோம் என்று எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஐக்கிய மக்

15

## உண்மை கண்டறியும் பொறிமுறை ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஜன. 18

உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க பொறிமுறை தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யுத்தத்தின் பின்னர் சமாதானத்தை பாதுகாப்பதற்காக அர்த்தமுள்ள வழிமுறையாக உண்மையைக் கண்டறியும் சுயா

15

## கல்முனை மாநகர சபை வேட்புமனு; உயர்நீதிமன்றம் இடைக்கால தடை!

கொழும்பு, ஜன. 18

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக கல்முனை மாநகர சபைக்காக வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுவதை தடுக்கும் வகையில் உயர் நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது.

ஏ.எம். மொஹமட் சலீம் என்பவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட

15

## வசந்தவுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

கொழும்பு, ஜன. 18

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான வசந்த முதலிகேயை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

15

## பொலிஸ்,காணி அதிகாரங்கள் வழங்கி இலங்கையைப் பிரிக்க இடமளியோம்!

### சபையில் சரத் வீரசேகர எம்.பி. ஆவேசம்

கொழும்பு, ஜன. 18

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, சமஷ்டி கட்டமைப்பை நாட்டில் கொண்டுவரும் தமிழ்க் கட்சிகளின் முயற்சிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்

15



## மாதம் ரூ. 9.5 இலட்சம் செலவு; கோட்டாபய ராஜபக்ஷவுக்காக!

### இது சிறிய செலவு என்கிறது அரசு

கொழும்பு, ஜன. 18

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மாதாந்தம் 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை அரசாங்கம் வழங்குகிறது. அத்துடன், அவரின் பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக 19 வாகனங்களை வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த செலவினங்களைப் பார்க்கும் போது இது ஒரு சிறிய செலவு மட்டுமே என்று கூறியுள்ளார் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன.

ஜனாதிபதி செயலகத்துக்கு செய்தியாளர் ஒருவர் விடுத்த எழுத்துமூல கோரிக்கைக்கு

15

## இப்படியும் நடக்கிறது...!

லண்டனிலிருந்து ஒருவர் அனுப்பிய மின்னஞ்சல் குறித்து நேற்று இந்தப் பத்தியில் கூறியிருந்தேன். அவரின் இந்த மின்னஞ்சலில் இருந்த விடயங்களை அவர் தனது முகநூலிலும் பதிவிட்டிருந்ததை மற்றுமொரு நண்பர் அனுப்பியிருந்தார்.

அவரின் கருத்தை அப்படியே முதலில் கீழே தருகின்றேன்:

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர்' என்று பொய்யான பிரசாரம் செய்கிறீர்கள். வெளியேறி கூட்டணி அமைத்திருக்கிறவர்கள் ரெலோவும் புளொட்டும்தான் என்துதான் உண்மை. தெரிந்தே பொய்ப் பிரசாரம் செய்வது அழகல்ல.

அடுத்து இந்த புதிய கூட்டணி முன்னெடுக்கிற பிரசாரத்தை நீங்களும் கிளிப்பிள்ளை போல பரப்புகிறீர்கள். அதாவது, முன்னாள் போராளிகளை உள்வாங்கியபடியால் தான் விக்னேஸ்வரன் விலகினார் என்று. அது உண்மையல்ல என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அது ஒரு பிரச்னை தான். எனினும், அது முக்கியமல்ல. என்னை செயலாளராக அல்லது எனது மான் சின்னத்தை ஏற்றுக்கொண்டால்தான் நான் இணைய முடியும் என தெட்டத் தெளிவாக புரியக் கூடிய தமிழில் சொல்கிறார். ஆனால், நீங்கள் அவர்களுக்கு வாக்குச் சேகரிப்பதற்காக முன்னாள் போராளிகள் விடயத்தை பொய்யாக முன்னெடுக்கிறீர்கள்.'

இதுதான் அவரின் மின்னஞ்சலில் இருந்து வந்த செய்தி.

முதலில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டவேண்டும். மூன்றுபேர் சேர்ந்து இயங்கிய ஒரு நிறுவனத்திலிருந்து ஒருவர் தாமாக வெளியேறினால் அந்த நிறுவனத்தை மூடிவிடவேண்டும் என்பதல்ல. மற்றைய இருவரும் அதனை நடத்திச் செல்லலாம் என்பது குழந்தைகளுக்கும் தெரிந்த சங்கதி. பிரிந்து செல்கின்ற ஒருவர் நிறுவனத்தை எடுத்துச் செல்லமுடியாது. அதனைக்கூட தெரிந்துகொள்ள முடியாத ஒருவர் தன்னை தமிழரசின் மத்தியகுழு உறுப்பினர் என்று வேறு கூறி, தமிழரசை அவமானப்படுத்துவதை அவர் புரிந்துகொள்ளவேண்டும்.

அண்மையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்று யாரும் இயங்க முடியாது என்று தமிழரசு எம். பி. சுமந்திரன் தெரிவித்திருந்ததை பார்த்த, கூட்டமைப்பில் தற்போதும் இருக்கும் கட்சி ஒன்றின் பிரமுகர் சொன்னது ஞாபகத்துக்கு வருகின்றது.

'மூன்று கட்சிகள் சேர்ந்து ஒரு கட்சியின் சின்னத்தில் இரண்டு தசாப்தங்களாக போட்டியிட்டிருக்கின்றோம். அப்படியெனில் அந்த சின்னத்தை மக்கள் மத்தியில் நாங்களும் சேர்ந்துதான் பிரபல்யப்படுத்தினோம். எமது ஆதரவாளர்களையும் அதில் வாக்களிக்க ஊக்குவித்தோம். இப்போது திடீரென்று தாங்கள் மாத்திரம் அதில் போட்டியிடப் போகின்றோம் என்று சொல்வதும் தவறானது. தேவையெனில் அதற்கு எதிராக நீதிமன்றத்தையும் நாட முடியும்' என்றார் அவர்.

கூட்டமைப்பு இப்போது போராளிக் கட்சிகள் வசமாகியிருக்கின்றது என்று பி. பி. சி. தமிழ் எழுதியுள்ள கட்டுரையை அன்பர் ஒருதடவை வாசித்து பார்க்கவேண்டும்.

அடுத்து, அவர் விக்னேஸ்வரன் கூட்டமைப்பில் சேருவதற்கு மறுத்தது தொடர்பாக குற்றஞ்சாட்டியிருக்கின்றார். அதாவது, விக்னேஸ்வரன் முன்னாள் போராளிகளின் ஜனநாயக போராளிகள் கட்சியை சேர்க்க மறுத்த விடயத்தை ஊர்க்குருவி எழுதியது பற்றி குறிப்பிடும் அவர், விக்கனேஸ்வரன் முன்வைத்த மற்றைய இரண்டு கோரிக்கைகளை கண்டுகொள்ளவில்லை என்கிறார். முன்னாள் போராளிகளை சேர்க்க அவர் மறுத்ததும் உண்மைதான் என்று சொல்லும் இவர், அதுபற்றி மாத்திரம் குறிப்பிட்டதைத் தான் குறைகூறியிருக்கின்றார்.

அவர் தனது கட்சியான மீன் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்றும், இல்லையேல் போட்டியிடும் புதிய கட்சிக்கு தன்னை செயலாளராக நியமிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். உண்மைதான் அதனை அவர், தனது ஊடக சந்திப்பிலும் விபரித்தார்.

ஆனால், அந்த ஊடக சந்திப்புக்கு பின்னர் அவருக்கு புதிய கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை கொடுக்க மற்றைய தலைவர்கள் சம்மதம் தெரிவித்திருந்தபோதிலும் அவர் ஜனநாயக போராளிகள் விடயத்தை ஏற்க மறுத்ததை பங்காளிக் கட்சிகள் ஏற்கவில்லை என்பதும் அதனால்தான் விக்னேஸ்வரன் இந்த அணியில் இணைவது நடக்கவில்லை என்பதும் லண்டனில் உள்ள அந்த அன்பருக்கு தெரிந்திருக்கவில்லை என்றால், அது ஊர்க்குருவிக்கும் தெரியாது என்பதல்லவே. பாவம் அவருக்கு விக்கியின் காணொலி மாத்திரமே செய்திகளை சொல்லும். ஆனால், எமக்கு அப்படியல்ல.!

**- ஊர்க்குருவி**

## ஆள்கடத்தலுக்கு முயற்சி; சந்தேகநபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஜன. 18

104 பேரை ஆள்கடத்த முயற்சித்த நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போதே நீதிமன்றம் உத்தரவிட்டது.

மியன்மாரில் இருந்து விரட்டப்பட்ட ரொஹிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேஷில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேசியாவுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் படகு மூலம் சட்ட விரோதமாக பயணித்தபோது யாழ்ப்பாணம் மருதங்கேணி அருகே நடுக்கடலில் படகு பழுதடைந்து தத்தளித்தனர்.

இவ்வாறு தத்தளித்தவர்கள் 2022 டிசெம்பர் 17ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர். சட்டத்துக்கு புறம்பாக இலங்கை கடற்பரப்பில் மீட்கப்பட்ட 104 பேர் மற்றும் அவர்களை சட்டத்துக்கு புறம்பாக நாடு கடத்த முற்பட்ட வலையமைப்புக்கு உதவியவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காங்கேசன்துறை பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்.

டிசெம்பர் 19ம் திகதி மாலை 105 பேரும் தடுத்து வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன்,104 பேரையும் அகதிகளுக்கான ஐ. நா ஆணையகம் பொறுப்பேற்பதாயின் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் அனுமதி பெற உத்தரவிட்டதுடன் அகதிகள் அனைவரையும் மீரிகான தடுப்பு முகாமில் தங்க வைக்க உத்தரவிட்டார். அத்துடன், நாடொன்றுக்கு 104 பேரையும் கடத்த முயற்சித்தவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்நிலையிலேயே நேற்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது அவருக்கு மீண்டும் விளக்கமறியல் உத்தரவிடப்பட்டது.

## பனைத் திருவிழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 18

எதிர்வரும் சனிக்கிழமை பனைத் திருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் விருத்தி போட்டிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கு மூன்று பிரிவுகளாக நடத்தப்படுகின்றன. தரம் 1 - 5 : சித்திரப்போட்டி, தரம் 6 - 9 : கட்டுரைப்போட்டி, தரம் 10 - 13 : ஆய்வுக்கட்டுரைப் போட்டி இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் அவர்களின் ஆக்கங்களை 077 108 1409 வட்ஸ் அப் இலக்கம் அல்லது panaithiruvizha@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது தபால் - 209, எழுதிரள், பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பா ணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

அனுப்பப்படும் ஆக்கங்களுடன் மாணவரின் முழுப் பெயர், தரம், பாடசாலை பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும். ஆக்கங்களை அனுப்பும் இறுதிநாள் நாளை வியாழக் கிழமையாகும்.

ஆக்கங்கள் மாணவர்களுடைய ஆக்கங்களாக இருப்பதுடன், தெரிவு செய்யப் படும் ஆக்கங்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு : 077 955 8919, 077 678 5023 என்ற கைபேசி இலக்ககங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாணவர்கள் அனைவரும் ,எமது கலாசார பொருண்மியமாக திகழும் 'பனை' தொடர்பான தமது சிந்தனைகளை ஆக்கங்களாக உருவம் கொடுத்து போட்டிகளில் பங்குபற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## எம். ஜி. ஆரின் 106ஆவது பிறந்தநாள் யாழில் சிறப்பான கொண்டாட்டம்!







யாழ்ப்பாணம், ஜன. 18

தமிழக முன்னாள் முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனின் நூற்று ஆறாவது பிறந்த தினம் நேற்று பிற்பகல் 3.15 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வியங்காடு செங்குந்த பொதுச்சந்தை வளாகத்தில் அமரர் சுந்தரலிங்கம் அமைத்த எம். ஜி. ஆர் உருவச்சிலை முன்பாக நடைபெற்றது.

எம். ஜி. ஆர். சிலைக்கு மாலை அணிவித்தும் தீப ஆராதனை காட்டப்பட்டும் மரியாதை செலுத்தி வெகு சிறப்பாக பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

யாழ். எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் அமரர் சுந்தர லிங்கத்தின் துணைவியார் திருமதி இலட்சுமியின் ஏற்பாட் டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் , வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ், வலி. கிழக்கு பிரதேச சபை உறுப் பினர் இராசேந்திரம் செல்வ ராஜா எம். ஜி. ஆர். ரசிகர்கள் கல்வியங்காடு மக்கள் எனப் பலர் இந்நிகழ்வில் பங்கேற்ற னர்.

இதன்போது, எம். ஜி. ஆர். பிறந்தநாளில் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

(ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
18.01.2023 புதன்கிழமை
பிலவ வருடம், தை 04
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இலங்கையின் சர்வதேச தராதரம்?

இலங்கையை மையப்படுத்தி இடம்பெற்றுவரும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் வரலாற்று நிகழ்வுகளாகவே இருக்கின்றன. சிங்களவர்களால் ஆட்சியில் அமர்த்தப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவை சிங்களவர்களே அகற்றினர். ஜனாதிபதியொருவர் பதவியிலிருந்து மக்களால் துரத்தப்பட்ட வரலாறு பதிவானது. அவ்வாறு வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி போக்கிடமில்லாமல் அலைந்து திரிந்த வரலாறும் பதிவானது. ஒரேயோர் ஆசனத்தை வைத்திருந்த ஒருவர் ஜனாதிபதியான புதியதொரு வரலாறும் பதிவானது. இவ்வாறானதொரு பின்னணியில், ஒரே நேரத்தில் - ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள்மீது செல்வாக்கான மேற்குலக நாடொன்று தடைவிதித்திருக்கும் வரலாறும் பதிவாகியிருக்கின்றது.

உலக நாடுகள் பயங்கரவாதத்தை தோற்கடிப்பது எவ்வாறென்று தங்களிடமே கற்றுக்கொள்ள வேண்டுமென்று ராஜபக்ஷக்கள் கூறிவந்த கதையை நாமறிவோம். ஆனால், உலக நிலைமைகளில் ஏற்பட்டிந்த மாற்றம் மற்றும் பிராந்திய சக்தியான ஆதரவை முற்றிலுமாக இழந்திருந்த சூழலில்தான் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர். இதில், ராஜபக்ஷக்களின் பிரத்தியேக திறமையென்று ஒன்றுமில்லை. இப்போது பிரபாகரனை மகிந்த ராஜபக்ஷ பார்த்துக் கொள்ளட்டும். பின்னர், நாம் ராஜபக்ஷக்களை பார்த்துக் கொள்வோமென்னும் அடிப்படையில்தான், மேற்குலகம் முக்கியமாக அமெரிக்கா செயல்பட்டிருந்தது. 2009இல் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து அதுவரையில் விடுதலைப் புலிகளை மட்டுமே பயங்கரவாத அமைப்பாக நோக்கிக் கொண்டிருந்த மேற்குலகம் ராஜபக்ஷக்கள்மீது திரும்பியது. இறுதி யுத்தத்தின்போது, இடம்பெற்றதாக நம்பப்படும் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் யுத்த குற்றங்களுக்காக பொறுப்புக் கூறவேண்டுமென்று கொழும்பின் மீது மென்மையான அழுத்தங்களை பிரயோகிக்கத் தொடங்கியது.

இதற்கான பிள்ளையார் சுழியை அமெரிக்காவே இட்டது. 2012இல் இலங்கையின் மீதான முதலாவது, அமெரிக்க அனுசரணை பிரேரணை, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இங்கிருந்து ஆரம்பித்த மேற்குலக மனித உரிமைகளுக்கான அழுத்தங்களே இன்று பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததாக பறைசாற்றிக் கொண்டிருந்த இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்ஷ சகோதரர்கள்மீது தடை விதிக்கப்படும் வரையில் சென்றிருக்கின்றது. இன்றும் பலர் மீதும் தடைகள் வரலாம். கொழும்பின் அதிகாரம் யாரிடத்தில் இருக்கின்றது என்பதை பொறுத்து அழுத்தங்களின் தன்மைகள் மாற்றமடையலாம். ஆனால், எந்த வகையிலும் ராஜபக்ஷக்களை மேற்குலகம் விரும்பி ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் மீது ஒரே நேரத்தில் தடை விதிக்கப்பட்டிருப்பதன் மூலம் இலங்கையின் சர்வதேச தாராதரம் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை இலங்கை எதிர்பார்த்திருக்கின்ற சூழலில்தான் இவ்வாறானதொரு தடை அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. இதன் மூலம், அடிப்படைவாத, இனவாத மற்றும் மதவாத சக்திகளின் பிடியில் இலங்கை சென்றால் சர்வதேசத்தில் இருந்து மேலும் தனிமைப்படலாம் என்னும் செய்தியும் இதற்குள் இருக்கின்றது. இதிலிருந்து தப்புவதற்காக சீனாவின் பக்கமாக சென்றுவிடலாமென்று கொழும்பு எண்ணினால், அது கொதி பானையிலிருந்து அடுப்புக்குள் வீழ்ந்த கதையாகிவிடலாம். ஏனெனில், சீனாவுடனான நெருங்கிய நட்பிலிருந்த பாக்கிஸ்தானும் சர்வதேச நாணய நிதியத்திடம்தான் கையேந்தியிருக்கின்றது.

# அதிகாரிகளின் தவறுக்காகவே எனக்கு நட்டஈடு விதிக்கப்பட்டது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஜன. 17

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கோடி ரூபாய் வழங்குவது எனது தவறுக்காக அல்ல, மாறாக என்னால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தங்கள் பொறுப்பை சரியாக செய்யாததாலேயே இழப்பீடு வழங்க உத்தர விடப்பட்டுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான புலனாய்வுத் தகவல்கள், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால், அப்போதைய ஜனாதிபதி என்ற முறையில் எனக்கு தெரிவிக்கப்படவில்லை என்பதை, உயர் நீதிமன்றத் தீர்ப்பு தெளிவாக குறிப்பிட்டுள்ளது. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட எந்தவோர் அதிகாரியும் தவறு செய்தால் அதற்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும். அதன், அடிப்படையில்தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் அவதானித்துள்ளது.

எனது அரசியல் எதிரிகள் சிலர் 100 மில்லியன் ரூபாய் அபராதம் என்று கூறுகின்றனர். எனினும் அது அபராதம் அல்ல இழப்பீடு என்றும் அவர் கூறினார்.

எந்தவோர் அதிகாரியும் அல்லது ஜனாதிபதியும் நட்டஈடு வழங்குவது புதிய சூழ்நிலையல்ல எனத் தெரிவித்த அவர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல் தொடர்பான வழக்கு தொடர்பாக மூன்றரை இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கினார் என்றார்.

நீதிமன்றத் தீர்ப்பை தாம் மதிப்பதாகத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, எவ்வாறாயினும், 10 கோடி ரூபாயை செலுத்தும் பொருளாதார சக்தி தமக்கு இல்லை எனவும் தனது நலன் விரும்பிகளிடமிருந்து நிதி திரட்ட வேண்டும் - எனவும் தெரிவித்தார்.

# சிறுதானிய பொங்கல் விழா மல்லாகத்தில் சிறப்புற நடந்தது!

யாழ்ப்பாணம், ஜன. 18



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொங்கல் விழாவை இம்முறை சிறுதானியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் கொண்டாடியுள்ளது. இராசபோசனம் என்ற பெயரில் இந்தப் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மல்லாகத்தில் இடம்பெற்றது.

கல்லாரை வளர்பிறை முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இவ்விழாவில் கலாநிதி பாலசிவகடாட்சத்தின் சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பும் 'பயன் அறிந்து உண்க' என்ற நூலும் வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ச. முகுந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார். சிறப்பு விருந்தினராகக் கவிஞர் சோ. பத்மநாதன் பங்கேற்றிருந்தார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தமிழ் மக்களின் பண்டைய உணவுப் பண்பாட்டில் பிரதான இடத்தைப் பெற்றிருந்த சிறு தானியங்களை மீளவும் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஏற்கனவே இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. சிறுதானியங்களை மீளவும் முடிசூட்டுவோம் என்ற கருப்பொருளில் அமைந்த இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குச் சிறுதானிய விதைகள் இலவசமாக வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே இம்முறை பொங்கல் விழாவை சாமை அரிசியில் பொங்கிச் சிறுதானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடியது.

கலை நிகழ்ச்சிகளும் பாராம்பரிய விளையாட்டுகளும் இடம்பெற்றிருந்த இப்பொங்கல் விழாவில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். (ஐ)


# 62 லீற்றர் கோடாவுடன் ஒருவர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயற்படும் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆனைக்கோட்டை, ஆறுகால்மடப் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தவென மறைத்து வைக்கப்பட்டிருந்த கோடா மற்றும் கசிப்பு தயாரிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது 62 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது. இதன்போது சந்தேகத்தின்பேரில் 65 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




**மேடம்**
உங்களது முயற்சிகளில் தடைகள் தடங்கல் என்ற நிலை ஏற்படும். கவனமாக செயல்படுங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் இல்லையெனில் சங்கடங்கள் உண்டாகும்.

**இடபம்**
உங்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் ஆதரவால் உங்கள் முயற்சிகள் நிறைவேறும்.

**மிதுனம்**
உயர்ந்தோர் ஆதரவால் உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்ப்புகள் விலகும். நினைத்தது நடந்தேறும். விரைந்து செயல்பட்டு ஒரு செயலை முடிப்பீர்கள். தடைபட்டிருந்த வருவாய் வந்து சேரும்.

**கடகம்**
எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று வந்து சேரும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த ஒன்று ஆதாயமாகும். நினைத்தது நிறைவேறும். வழக்கு சாதகமாகும்.

**சிம்மம்**
தாய்வழி உறவுகளால் சங்கடங்கள் தோன்றும் என்றாலும், உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக பணியாளர்கள் மறைமுகமாக தொல்லை அளிப்பார்கள்.

**கன்னி**
உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும். புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை வெற்றியாகும். பணியாளர்களின் ஒத்துழைப்பு லாபத்தை அதிகரிக்கும்.

**துலாம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். தம்பதியர் ஒருவர் ஒருவரை புரிந்து கொண்டு செயல்படுவீர்கள். புதிய வேலை வாய்ப்பிற்குரிய முயற்சி வெற்றியாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
உங்கள் திட்டமிடுதலில் குழப்பம் உண்டாகும். நீங்கள் நினைத்ததற்கு மாறாக சில செயல்கள் நடைபெறும். பொறுப்புகள் அதிகரிக்கும். சிலருக்கு பணியாளர்களுடன் பிரச்னைகள் உண்டாகும்.

**தனுசு**
செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கவனத்துடன் செயல்படுங்கள். சிக்கனத்தைக் கடைபிடியுங்கள். மற்றவருடன் அனுசரித்துச் செல்வதின் மூலம் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும்.

**மகரம்**
புதிய நட்பின் வழியே உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறி மகிழ்ச்சி காண்பீர்கள். எதிர்பாராத வருவாய் வந்து மகிழ்வீர்கள். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழிலில் ஆதாயம் உண்டு. நீங்கள் நினைத்த எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள்.

**மீனம்**
பழைய பிரச்னைகளைத் தீர்த்து வைப்பீர்கள். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். புதிய நட்பினால் உங்கள் எண்ணம் நிறைவேறும்.

# 2030இல் உலக பொருளாதாரத்தில் இந்தியா 3ஆவது சக்தியாக மாறும்

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

சென்னை, ஜன. 18

உலக பொருளாதாரத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியா 3ஆவது இடத்துக்கு முன்னேறும் என்று மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

துக்ளக் சஞ்சிகையின் 53 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் விருந்தினராக பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


இந்தியாவில் இருந்து 3.2 கோடி மக்கள் வெளிநாடுகளில் பணிபுரிகின்றனர். அவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் மத்தியஅரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. உக்ரைன் மீதான போரில், அங்கு வசித்த இந்தியர்களை மீட்க மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை உலக நாடுகளுக்கே வழிகாட்டுதலாக அமைந்தது.

தற்போது, உலக அளவில் பொருளாதாரத்தில் இந்தியா 5ஆவது நாடாக இருக்கிறது. 2030ஆம்ஆண்டுக்குள் இந்தியா 3ஆவது இடத்துக்கு முன்னேறும். பொருளாதாரத்தில் அந்த அளவுக்கு இந்தியாவின் தாக்கம் உயர்ந்துவருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் எந்தவித சமரசத்துக்கும் மத்திய அரசு செல்லவில்லை. தீவிரவாதத்தை ஒருபோதும் இந்தியா அனுமதிக்காது. அதில் மிக உறுதியாக இருக்கிறோம்.

இந்தியாவின் வெளியுறவு கொள்கையை அனைத்து நாடுகளும் பெருமையுடன் பார்க்கின்றன. இந்தியாவின் வெற்றியோ, தோல்வியோ எதுவாக இருந்தாலும்அது உலக நாடுகளில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். ஒருகாலத்தில் பேரிடர் காலங்களில் உலக நாடுகளின் உதவியை இந்தியா எதிர் நோக்கியது.

சட்டப்பேரவையில் ஆளுநர் பேசுவதே உரையாகும். அதில்மாற்றம் கொண்டுவர வேண்டுமெனில் பேரவையில் விவாதித்து முடிவெடுத்த பின்னரே மாறுதல் செய்ய முடியும். ஆளுநர் உரையை ஏற்கமாட்டோம் என்று விவாதிப்பதற்கு முன்னரே தீர்மானம் கொண்டு வருவது ஏற்புடையதல்ல. ஆளுநர் உரைக்கு ஓர் அரசு ஒப்புதல் அளிக்காவிட்டால் இராஜிநாமா செய்ய வேண்டும். இந்த காரணத்தால் பஞ்சாப், உத்தர பிரதேச மாநிலங்களில் ஆட்சியாளர்கள் ராஜினாமா செய்யும் நிகழ்வுகள் நடந்துள்ளன. ஆளுநருக்கு எதிராக பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியததை எதிர்த்து நீதிமன்றத்தை அணுக முடியும் - என்றார். (ஐ)

# தீண்டாமை கொடுமை வழக்கை நீர்த்துப்போகச் செய்ய முயற்சி!



சென்னை, ஜன. 18

வேங்கைவயல் தீண்டாமைக் கொடுமை வழக்கை குற்றப்புலனாய்வுத்துறை விசாரணைக்கு மாற்றுவது, வழக்கை காலம் தாழ்த்தி நீர்த்துபோகச் செய்யும் முயற்சி என நாம் தமிழர் கட்சி சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில், “புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயலில் ஆதித் தமிழ்க்குடிகள் மீதான தீண்டாமைக் கொடுமை வழக்கை குற்றப்புலனாய்வுத் துறை விசாரணைக்கு மாற்றி, வழக்கினை காலம்தாழ்த்தி நீர்த்துப்போகச் செய்யும் தமிழ்நாடு அரசின் செயல் வன்மையான கண்டத்திற்குரியது. தமிழ்நாட்டின் சிறு கிராமத்தில் தீண்டாமைக் கொடுமை புரிந்த குற்றாவாளிகளைகூட கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு தமிழ்நாட்டு காவல்துறை திறனற்றதாகிவிட்டதா என்ற கேள்வியும் எழுகிறது.

துப்பறிய கடினமான அரிதான கொடுங்குற்ற வழக்குகளை மட்டும், விரைந்து விசாரணை நடைபெற வேண்டி குற்றப்புலனாய்வு விசாரணைக்கு மாற்றிய நிலைமாறி, தி. மு. க ஆட்சிப்பொறுப் பேற்ற பிறகு, மக்களின் மனக் கொந்தளிப்பை அடக்கும் வகையில் உணர்வுப்பூர்வமான வழக்குகள் அனைத்தையும் குற்றப்புலனாய்வுத்துறை விசாரணைக்கு மாற்றி கிடப்பில் போடுவதென்பது வழக்கமாகிவிட்டது.

முன்னைய வழக்குகள் போல, வேங்கைவயல் தீண்டாமைக் கொடுமை வழக்கையும், கிடப்பில் போட்டு குற்றவாளிகளை தப்புவிக்க செய்யும் முயற்சியே வழக்கை குற்றப்புலனாய்வுத்துறை விசாரணைக்கு மாற்றும் தமிழ்நாடு அரசின் அறிவிப்பாகும்.

குற்றப்புலனாய்வுத்துறை விசாரணை என்ற பெயரில் வேங்கைவயல் தீண்டாமைக் கொடுமை வழக்கை தமிழக அரசு மேலும், மேலும் காலம் தாழ்த்தி நீர்த்துப்போகச் செய்யாமல் குற்றவாளிகளை விரைந்து கைது செய்து சட்டப்படி கடும் தண்டனை பெற்றுத் தர வேண்டுமென வலியுறுத்துகிறேன்.” என்று சீமான் கூறியுள்ளார்.

# எடப்பாடி, பன்னீரை விரைவில் சந்திப்பேன்!



## சசிகலா தெரிவிப்பு

சென்னை, ஜன. 18

ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிசாமியை விரைவில் சந்திக்கும் திட்டம் உள்ளதாக சசிகலா தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆரின் 106ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை தி.நகரில் உள்ள தனது இல்லத்தில், எம்.ஜி. ஆரின் திருவுருவப் படத்திற்கு வி.கே.சசிகலா மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆளுநர் விவகாரத்தில், ஆளுநரை எப்படி நடத்த வேண்டும் என்ற அணுகுமுறை உள்ளது. அதைப்போல தமிழக அளுநரை, தமிழக அரசு நடத்த வேண்டும். ஒருவருக்கொருவர் ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளாமல், வாக்கு போட்ட மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்று யோசிக்க வேண்டும்.

ஜெயலலிதா சொல்வதை மட்டுமே செய்வார். மக்களை ஒருபோதும் அதிமுக ஏமாற்றியது இல்லை. வரும் காலங்களில் நன்றாக யோசித்து திமுக அரசு செயல்பட வேண்டும்.

வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றிணைந்து, தி. மு. கவை வீழ்த்தி, அதை எம். ஜி. ஆரிடம் சமர்ப்பிப்போம். அனைவரும் ஒன்றிணைந்து திமுகவை வீழ்த்த வேண்டும். எங்கள் கட்சிக்காரரை சந்திப்பதற்கு, எனக்கு என்ன பயம்? விரைவில் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிசாமியை சந்திக்கும் திட்டம் உள்ளது” என்று அவர் கூறினார். (ஐ)

# செலவின ஒதுக்கீடு 6 வீதத்தால் குறைப்பு

## சுகாதாரத்துக்கு மேலதிக நிதி

கொழும்பு, ஜன. 18

**2023 ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட அரச செலவு மதிப்பீடுகளில், மீண்டெழும் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளை 6 வீதத்தால் குறைக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.**

நிலவும் மட்டுப்படுத்தப்பட்ட நிதிச் சூழலில் அரச செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், அத்தியாவசியமானதும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கருமங்களுக்காக போதியளவு ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்தும் வகையிலும், 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் அரச செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மீண்டெழும் செலவின ஒதுக்கீடுகள் குறைக்கப்படவுள்ளன.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக திறைசேரியால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி, அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார்.

அதற்கமைய, இது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மீண்டெழும் செலவின ஒதுக்கீடுகளை 6 வீதத்தால் குறைப்பதற்கும், அதில் ஒரு வீதத்திற்கு சமமான ஒதுக்கீட்டை அத்தியாவசிய மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான மேலதிக நிதியொதுக்கீடாக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கி வழங்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ)

# சிறுநீரக கடத்தல்

## 2 கிராம அலுவலர்கள் உட்பட மூவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜன. 18

பொரளை தனியார் வைத்தியசாலையில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மக்களை பணம் தருவதாக கூறி ஏமாற்றி சிறுநீரக கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளை பொலிஸ் நிலையத்தில் கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகள் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோசடியின் பிரதான தரகராக செயற்பட்ட கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் ஆமர் வீதிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

போலிச் சான்றிதழ் வழங்கி சிறுநீரக கடத்தல் காரர்களுக்கு உதவியமை தொடர்பில் கொலன்னாவை மற்றும் ஜெயவர்தனபுர கோட்டே பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் இருவர் நேற்று முன்தினம் பிற்பகல் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 59 வயதுடையவர்கள் எனவும், ராஜகிரிய மற்றும் கடுவெல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது. (அ)

# கியூ.ஆர். பின்பற்றாத எரிபொருள் நிலையங்களின் உரிமங்கள் ரத்து

கொழும்பு, ஜன. 18

கியூ.ஆர்.கோட்டா முறையைப் பின்பற்றாமல் எரிபொருளை விநியோகித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமம் உடனடியாக இரத்து செய்யப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல நிரப்பு நிலையங்கள் எரிபொருள் விநியோகத்தில் தேசிய எரிபொருள் பாஸ் முறையைப் பின்பற்றுவதில்லை என்று ஒரு அதிகாரி கூறினார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய களஞ்சியசாலை ஆகியவற்றின் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கியூ.ஆர். விநியோக பொறிமுறையை மீளாய்வு செய்வதற்கான ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. பின்னர், கோட்டா முறையைப் பின்பற்றாத பல எரிபொருள் நிலையங்களை இடைநிறுத்த முடிவு செய்யப்பட்டது.

மின்சார சபையினால் செலுத்த வேண்டிய 105 பில்லியன் ரூபாவை மீளப்பெறுதல், தடையற்ற எரிபொருள் விநியோகத்திற்கான சரக்குத் திட்டங்கள் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை தொடர்வது குறித்தும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. (அ)

# தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் அரசமைப்புக்கு இசைவானது

## உயர்நீதிமன்றம் தீர்மானம்

கொழும்பு, ஜன. 18

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு இசைவானது எனவும் அதனை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் எனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு இன்று கூடவுள்ளதுடன், அந்தக் குழு தீர்மானித்தால், தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு விவாதம் நாளை காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இடம்பெறவுள்ளது. (அ)

# முட்டைகள் இறக்குமதிக்கான சுகாதார பரிந்துரை இல்லை

கொழும்பு, ஜன. 18

முட்டை இறக்குமதி தொடர்பான சுகாதார பரிந்துரைகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என அரச வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அந்த நிலையில் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் முட்டை விநியோக நடவடிக்கைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என அதன் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட் டுள்ளபோதிலும், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பரிந்துரை கிடைக்காமை காரணமாக அந்த நடவடிக்கை தாமதமடைந்துள்ளது.

இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பரவி வருவதன் காரணமாக முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்க முடியாத நிலை காணப்படுவதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருந்தது.

இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி செய்யப்பட்டால் 40 ரூபா எனும் சில்லறை விலைக்கு விற்பனை செய்ய முடியும் என அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர கூறினார்.

இதன்மூலம் தற்போது சந்தையில் காணப்படும் முட்டைப் பிரச்னைக்கு உடனடி தீர்வு கிடைக்கும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (அ)


# காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது. 2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அததோனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட இதுவரை வெளிவராதி சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசரணை: ஈழநாடு


# மைத்திரியின் சொத்துக்கள் முடக்கப்படுவதற்கு வாய்ப்பு

கொழும்பு, ஜன. 18

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைவாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை வழங்கத் தவறினால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஐவரின் சொத்துக்கள் முடக்கப்படலாம் என்று சிரேஷ்ட சட்டத்தரணி காமினி பெரேரா தெரிவித்தார்.

"ஈஸ்டர் தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காதமை தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு ஒன்றை வழங்கியது. அந்தத் தீர்ப்பின்படி, மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஐவர் 31 கோடி ரூபாவை பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடாக வழங்க வேண்டும். இதனை வழங்கத் தவறினால் இந்த ஐவரின் சொத்துக்கள், சம்பளம், ஓய்வூதியம் போன்றவை முடக்கப்படலாம்" என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, இந்தத் தண்டனைக்கு மேலதிகமாக சிறைத்தண்டனையும் வழங்க முடியும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார். (அ)

# கப்ராலுக்கு பயணத் தடை பெப்ரவரி 16 வரை நீடிப்பு

கொழும்பு, ஜன. 18

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் தென் மாகாண ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனினால் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பான எழுத்துமூலர்வ உரைகளை சமர்ப்பிக்க கப்ரால் தரப்புக்கு பெப்ரவரி 16 வரை நீதிமன்றம் அவகாசம் அளித்தது.

2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றியபோது, அஜித் நிவார்ட் கப்ரால் பொது நிதியை துஷ்பிரயோகம் செய்தார் என குற்றம் சுமத்தி இந்த தனிப்பட்ட முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா மாநகர சபையில் ரெலோ ஆட்சி அமைக்கும்!

## வினோ எம்.பி. நம்பிக்கை

வவுனியா, ஜன. 18

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் வவுனியா மாநகர சபையில் தமிழீழ விடுதலை இயக்கம் மேயரை நியமித்து ஆட்சி அமைக்கும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.**

வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது மற்றும் வட்டாரங்களில் வேட்பாளர்களை நியமிப்பது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாநகரசபை மற்றும் 3 பிரதேச சபைகளில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகின்றது.

இதன்போது வவுனியா மாநகரசபையில் குறித்த கூட்டணி வெற்றி பெறும் பட்சத்தில் ரெலோவுக்கும், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் ஈ. பி. ஆர். எல். எப் கட்சிக்கும், செட்டிகுளம் பிரதேச சபையில் புளொட்டுக்கும் வவுனியா வடக்கு பிரதேச சபையில் ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பொறுப்பு பகிரப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த உள்ளூராட்சி மன்றங்களில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தொடர்பிலும் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.



# மேலதிக வகுப்புக்களுக்கு நேற்று நள்ளிரவு முதல் தடை

கொழும்பு, ஜன. 18

உயர்தரப் பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள் மற்றும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் பரீட்சை முடிவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, குறித்த பரீட்சையுடன் தொடர்புடைய கையேடுகளை விநியோகித்தல், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்துதல் என்பனவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவற்றை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அது தொடர்பாக தகவல் இருந்தால் பரீட்சை திணைக்களத்தின் 1911 என்ற உடனடி தொலைபேசி இலக்கமான 0112 785212 அல்லது 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்கு மாறும் கோரப்பட்டுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னார் செயலகம் முன் போராட்டம்!

மன்னார், ஜன. 18

மன்னாரில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேசக்கரம் பிரஜைகள் குழு மற்றும் மன்னார் மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் இணைந்து ஏற்பாடு செய்த இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.



வடக்கு மாகாணத்தில் மக்களைப் பாதிக்கும் வள சுரண்டல்கள், காணி அபகரிப்புக்கள், கடற்பரப்புக்களை தனியார் வசப்படுத்தல் போன்ற செயற்பாடுகளைக் கண்டித்தும், சமத்துவத்தையும் நிலை நிறுத்தக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்ற போராட்டக்காரர்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். (அ)

# யாழ். பல்கலைக்கழகத்தின் கலை பீடாதிபதியாக ரகுராம்!

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் புதிய பீடாதிபதியாக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் சி. ரகுராம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் மூன்று வருட காலத்துக்குச் செயற்படும் வகையில் இவர் பீடாதிபதியாக பணியாற்றவுள்ளார்.(அ)



# மேலும் 5 மாதங்களுக்கு நிதி நிவாரணம் நீடிப்பு

கொழும்பு, ஜன. 18

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நிதி நிவாரணத்தை மேலும் 5 மாதங்களுக்கு நீடிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட சமூகத்தில் இடர்களுக்கு ஆளாகக்கூடிய குடும்பங்களுக்கு 2023 ஆம் ஆண்டில் முதல் நான்கு மாதங்களுக்கு நிதிச் சலுகை வழங்குவதற்கும் 2023 ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் முன்னதாக தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நிதிச்சலுகைகளை 2023 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை, மேலும் ஐந்து மாத காலத்திற்கு நீடிப்பதற்கு தேவையான நிதியொதுக்கீட்டை வழங்க நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் போராட்டம்!



வவுனியா, ஜன. 18

வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட புதிய வரிக்கொள்கை மற்றும் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தன்னிச்சையான அசாதாரண வரி திருத்தத்தை உடனடியாக மீளப்பெறு, மருந்து இல்லை சுகாதார கட்டமைப்பும் சீர் குலைந்துள்ளது, சத்திர சிகிச்சைகளும் இல்லை மருந்துகளும் இல்லை என்ற பதாதைகளை வைத்தியர்கள் தாங்கியிருந்தனர். (அ)

# விண்ணக வாழ்வில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி ஸ்டெலா சாமுவேல்

நான் நல்லதொரு போராட்டத்தில்
ஈடுபட்டேன் என் ஓட்டத்தை
முடித்து விட்டேன் விசுவாசத்தைக்
காத்தும் கொண்டேன் (2 தீமோத்தேயு 4:7)

இவ்வான்ம இளைப்பாற்றுக்காக இரங்கல் திருப்பலி இத்தாலி சன் மிலனோ தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**



## பொங்குதமிழ் பிரகடனத்தின் 22ஆம் ஆண்டு நிறைவு நேற்று

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 22 ஆம் ஆண்டு நிறைவு நாள் நேற்று செவ்வாய்க்கிழமை நினைவு கூரப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், மாணவர்கள் இணைந்து பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்துக்குள் உள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபி முன் கூடி பொங்குதமிழ் பிரகடன நிறைவு நாளை நினைவு கூர்ந்தனர்.

இதன்போது பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணைய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவை அங்கீகரிக்கப்படவேண்டும் என பொங்குதமிழ் பிரகடனத்தில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மொட்டு கட்சியில் போட்டியிட உறுப்பினர்கள் முண்டியடிப்பு!

### கூறுகிறார் சாகர காரியவசம்



கொழும்பு, ஜன. 18

**பொதுஜன பெரமுன கட்சிக்கு இருந்ததைவிடம் தற்போது கேள்வி அதிகரித்துள்ளது. உள்ளூராட்சித் தேர்தலில் மொட்டு கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு கடும் போட்டி நிலவுகின்றது என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் மொட்டு கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு பலரும் முன்வந்துள்ளனர். இதனால் கடும் போட்டி நிலவுகின்றது. கடந்த முறையைவிடவும் இம்முறை கேள்வி அதிகரித்துள்ளது. இது சிறந்த அறிகுறியாகும்.

சில சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளோம். அதில் எமது வேட்பாளர்களும் இருப்பார்கள். மேலும் சில சபைகளில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவோம். அதில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களும் இருப்பார்கள். சில இடங்களில் இரு தரப்பினரும் தனிவழி செல்வோம். எனினும், எம் மத்தியில் புரிந்துணர்வு இருக்கும்.

மத்திய அரசமைப்பதற்காக ஏற்பட்ட இணக்கப்பாடு மற்றும் அரசியல் நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் எதிர்கொள்ளப்படும் - என்றார். (அ)

## யாழ்.போதனா வைத்தியசாலை முன் அரசுக்கு எதிராக நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 18

அரசாங்கத்தின் தன்னிச்சையான அசாதாரண வரித் திருத்தத்தை உடனடியாக நிறுத்த வலியுறுத்தியும் மருந்து தட்டுப்பாட்டுக்குத் தீர்வு கோரியும் யாழ்ப்பாணத்தில் நேற்று நண்பகல் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், பல் மருத்துவத் துறை சார்ந்தவர்கள், சட்ட மருத்துவ அதிகாரிகள், வங்கிகளின் தொழிற்சங்க அதிகாரிகள், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், இலங்கை



மின்சார சபையின் பொறியியலாளர் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

அரசாங்கம் குறித்த பிரச்னைகளுக்கான தீர்வை தர முன்வர வேண்டுமென போராட்டக்காரர்கள் கோரினர். (அ)

## கொழும்பு மேயர் வேட்பாளராக நிறுத்தப்படும் பைசர் முஸ்தபா?

### ஆராய்கின்றது ஐக்கிய தேசிய கட்சி



கொழும்பு, ஜன. 18

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மேயர் வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபாவை களமிறக்குவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி சிங்கள நாளிதழொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே பைசரை களமிறக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

சுதந்திரக்கட்சியின் உப தலைவரான பைசர் முஸ்தபா, அந்தக் கட்சியின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலகியுள்ளார். இது தொடர்பான இராஜினாமா கடிதத்தை கட்சித் தலைவருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராக முஜிபூர் ரஹ்மானை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. (அ)

## கடமை நேரத்தில் வெற்றிலை மென்ற தமிழ் பொலிஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய நுழைவாயிலில் வெற்றிலை மென்றபடி கடமையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை யாழ். பொலிஸ் நிலைய நுழை வாயிலில் வாயில் கடமையில் ஈடுபட்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வாயில் வெற்றிலை மென்றபடி பொலிஸ் நிலையத்துக்கு வருபவர்களுடன் அடாவடித்தனமாகச் செயற்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டது.

வெற்றிலை மென்றபடி கடமையில் ஈடுபட்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரை கடமையில் இருந்து அகற்றி உடனடியாக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் நிலைய நிர்வாக அதிகாரிக்கு பணிப்புரை விடுத்தார். (அ)

## பரீட்சைக் காலத்தில் தடையற்ற மின்சாரம்

கொழும்பு, ஜன. 18

உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள காலப்பகுதியில் தொடர்ச்சியாக மின்சாரத்தினை விநியோகிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மின்சார சபையுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் கோரிக்கைக்கு அமையவே, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது.

இதேவேளை, அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்ட உத்தேச மின்சார கட்டணத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த முடியாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அமைச்சரவைக்கு அறிவித்துள்ளது. (அ)

## கட்டுப்பணத்தை ஏற்காதிருப்பதற்கு அமைச்சரவை தீர்மானிக்கவில்லை!

### சபையில் விளக்கினார் பிரதமர்



கொழும்பு, ஜன. 18

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப் பணத்தை ஏற்காதிருப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்படவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை ஏற்கவேண்டாம் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் ஹப்புஹின்ன அண்மையில் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், தொழில்நுட்பக் கோளாறு உள்ளதாக தெரிவித்து சில மணித்தியாலங்களுக்குள் அந்தக் கடிதம் மீளப்பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கழுத்து வெட்டப்பட்ட நிலையில் 23 வயது யுவதி சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜன. 18

கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பெண் ஒருவரின் சடலம் கொழும்பு 7 குதிரைப் பந்தய மைதானத்திற்தில் கண்டெடுக்கப்பட்டது. மைதானத்தில் உள்ள புள்ளிவிவர பலகைக்கு அருகில் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து கறுவாத்தோட்டம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 23 வயதுடையவர் எனவும் அவர் ஹோமா கம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் கூறப்பட்டது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் கழுத்தில் ஆழமான வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. (அ)

ஈழநாடு



# இந்தியாவில் பொருளாதார நெருக்கடி ஏற்படும்: முதன் முறையாக மத்திய அரசு ஒப்புதல்



உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பொருளாதார பெருமந்தம் இந்தியாவையும் தாக்கக் கூடும் என்று முதன் முறையாக இந்திய மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

நாக்பூரில் தொடங்கியுள்ள ஜி20 நாடுகளின் உள்கட்டமைப்பு பணிக்குழு கூட்டத்தில் பேசிய மத்திய அமைச்சர் நாராயண் ரானே அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

பொருளாதார வலிமையில் முதல் 20 இடங்களில் உள்ள நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி20 கூட்டமைப்பிற்கு இந்தியா தலைமையேற்ற பிறகு, முதன் முறையாக அதன் உள்ளகட்டமைப்புப் பணிக்குழுவின் 2 நாள் கூட்டம் மகாராஷ்டிர மாநிலம் புனே நகரில் தொடங்கியுள்ளது.

நகரங்களை பொருளாதார வளர்ச்சி மையங்களாக மாற்றுதல், நகர்ப்புற உள்கட்டமைப்புக்கு நிதியளித்தல் மற்றும் எதிர்காலத்தை தயார்படுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்கள் இந்த கூட்டத்தில் விவாதிக்கப் படுகின்றன.

மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் நாராயண் ரானே இந்த கூட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார். “இந்தியா தலைமையேற்று நடத்தும் இந்த கூட்டத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் பலவும் பங்கேற்றுள்ளன. நாங்களும் வளர்ந்த நாடாக விரும்புகிறோம். நாங்கள் எங்களது பிரதமரை நினைத்து பெருமைப்படுகிறோம். கடந்த 8 ஆண்டுகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மற்ற துறை வளர்ச்சியின் மூலம் பல நாடுகளின் கவனத்தை இந்தியா ஈர்த்துள்ளது.” என்று அவர் கூறினார்.

சர்வதேச மாநாட்டை தொடங்கி வைப்பதில் பெருமை கொள்வதாக குறிப்பிட்ட நாராயண் ரானே, “தற்போது வளர்ந்த நாடுகள் பலவும் பொருளாதார பெருமந்தத்தை எதிர்கொண்டுள்ளன என்பதே உண்மை. இந்தியாவையும் வரும் ஜூனுக்குப் பிறகு பொருளாதார பெருமந்தம் தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நாட்டு மக்களை பாதிக்காத வகையில் தடுக்க மத்திய அரசும், பிரதமர் மோடியும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்” என்று நாராயண் ரானே தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை பொருளாதார பெருமந்தம் அச்சுறுத்தும் நிலையில், இந்தியாவை அது தாக்க வாய்ப்பே இல்லை என்று மத்திய அரசு மீண்டும் மீண்டும் கூறிவந்தது. கடந்த



ஆகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மத்திய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்தியாவில் பெருமந்தம் வர வாய்ப்பே இல்லை என்று புள்ளிவிவரங்களுடன் எடுத்துரைத்தார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையில் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளைக் காட்டிலும் இந்தியா சிறப்பான நிலையில் இருப்பதாக நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார். அதற்கு நேர்மாறாக நாராயண் ரானேவின் இன்றைய பேச்சு அமைந்துள்ளது.

பொருளாதார பெருமந்தம் இந்தியாவையும் தாக்கக் கூடும் என்று மத்திய அரசே ஒப்புக் கொண்டிருப்பதால், சாமான்ய மக்களிடையே அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்று நிபுணர்கள் மத்தியில் இப்போதே அனல் பறக்கும் விவாதம் தொடங்கிவிட்டது.

# அச்சுறுத்தும் மின்னணு கழிவுகள்

**இரா. ஜெயசீலன்**

உலக அளவில் மின்னணு கழிவுகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்தவாறே உள்ளது. மின் கழிவுகளை உருவாக்குவதில் சீனா முதலிடத்திலும், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன. பயன்படுத்தாத கணிப்பொறி சாதனங்கள், துணி துவைக்கும் இயந்திரம், வீடு மற்றும் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் குளிரூட்டிகள், வானொலிப் பெட்டிகள், தொலைகாட்சிப் பெட்டிகள், கைப்பேசிகள் ஆகியவையே முக்கிய மின்கழிவுப் பொருட்களாக மாறிவருகின்றன.

2021- ஆம் ஆண்டு ஆய்வு முடிவின்படி, பயன்பாடு முடிந்து வீசியெறியப்பட்ட மின்னணு கழிவு பொருட்க ளின் அளவு 5.7 கோடி எனவும் இது சீனப்பெருஞ்சுவரை விட அதிகம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய அளவில் மின்னணு கழிவுகளை உருவாக்குவதில் மும்பை முதலிடத்திலும், தமிழகம் இரண்டாவது இடத்திலும், ஆந்திர பிரதேசமும் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இந்நிலை தொடர்ந்தால் 2030 ஆண்டு வாக்கில் ஓராண்டுக்கு 7.4 கோடி தொன் அளவிற்கு மின்னணு கழிவுகள் சேரும் என 2020-ஆம் ஆண்டு ஐ.நா. சபை வெளியிட்ட “குளோபல் இ வேஸ்ட் மானிட்டர்”’ என்ற அமைப்பு தெரிவிக்கிறது. ஒரு கணிணியில் உள்ள சுமார் 1,000 மின்னணு பாகங்களில் 50 மின்னணு பொருட்கள் நச்சுத்தன்மையுடையவையாக உள்ளன. இப்பொருட்கள் நுகர்வோரால் நிராகரிக்கப்பட்டு பொது இடங்களில் வீசப்படும்போது அவை சுற்றுச்சூழலை பெரிதும் பாதிப்படையச் செய்கின்றன.

சர்வதேச அளவில் ஆண்டுதோறும் உருவாக்கப்படும்



5.3 கோடி தொன் மின்னணு கழிவுகளில் 17 வீதம் முதல் 20 வீதம் வரையே மறுசுழற்சி செய்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவை தவிர அந்நிய நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் சுமார் பத்து லட்சம் தொன் அளவிற்கு கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட மின்னணு கழிவுகள் இந்தியாவில் குவிகின்றன எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

2019-ஆம் ஆண்டில் சுமார் 50 லட்சம் தொன் மதிப்புள்ள மின்னணு பொருட்கள் பொதுமக்கள் பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அவற்றில் மறுசுழற்சி செய்யப்பட்டவை மிகவும் குறைந்த விழுக்காடே. பெங்களூரு நகரில் மட்டும் ஆண்டுக்கு 8,000 தொன் அளவிற்கு மின்னணு கழிவுகள் வெளியிடங்களில் கொட்டப்படுவதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



சர்வதேச அளவில் 78 நாடுகள் மட்டுமே மின்னணு கழிவுகளை மறுசுழற்சி செய்கின்றன என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.“சர்வதேச மின்சார மற்றும் மின்னணு சாதனக் கழிவுகள் அமைப்பு அறிக்கை, கடந்த ஆண்டு (2022) மட்டும் சுமார் 530 கோடி கைப்பேசிகள் மறுசுழற்சி செய்யப்படாமல் பொது இடங்களில் வீசப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது.

இவ்வாறு தூக்கி வீசப்படும் மின்னணு பொருட்களி லுள்ள வேதிப்பொருட்களான காரீயம், ஈயம், பாதரசம், கந்தகம், டையாக்சின் போன்றவை காற்று மற்றும் வெளிப்புற ஈரம், வெப்பம் போன்றவற்றுடன் வினை புரிந்து நச்சுக் காற்றினை வெளிப்படுத்துகிறது. இந்த நச்சுக் காற்றை மனிதர்கள் சுவாசிக்கும்போது அவர்க ளின் சிறுநீரகம், இதயம் நுரையீரல், நரம்பு மண்டலம் போன்றவை பெருமளவு பாதிக்கப்படுகின்றன.

நிலத்தில் இவ்வகை கழிவுகள் புதைக்கப்படும்போது மண்ணின் நீர்தேக்கும் திறன் பாதிப்படையவும் அதன் காரணமாக நிலம் தரிசாக மாறவும் வாய்ப்புள்ளது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மின்னணு கழிவுகளில் தங்கம், காப்பர், காட்மியம், காரீயம் இண்டியம், பல்லாடியம் போன்ற விலைமதிப்பு மிக்க உலோகங்களும் உள்ளன.

இவற்றை மறுசுழற்சி செய்யும் போது பல மடங்கு திறன் பெற்றவையாக மாறக்கூடும். எனவே இவற்றை மறுசுழற்சி செய்வது என்பது சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கு மட்டுமல்லாது புதிய வகை வருவையைத் தரக்கூடியதாகவும் உள்ளது.

நிராகரிக்கப்படும் மின்கழிவுகளை முறையாக மறுசுழற்சி செய்தால் அதிக அளவில் வருமானம் கிடைக்கும் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மின்னணு பொருட்களை தயாரிக்கும் நிறுவனங்கள் மின் கழிவு மேலாண்மைக்கென பொருளின் விலையுடன் சேவை வரியையும் சேர்த்து விதித்தாலும் மின் கழிவு மேலாண்மையில் அவை பெரும்பாலும் ஈடுபடுவதில்லை.

மின்னணு கழிவுகளை சேகரித்து அவற்றை மறுசுழற்சிக்கு அனுப்பும் பணியில் முறைசாரா தொழிலாளர்களே பெருமளவு ஈடுபடுகிறார்கள். டில்லி போன்ற பெரிய நகரங்களில் சுமார் 5 முதல் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட முறைசாரா தொழிலாளர்கள் மின்னணு கழிவுகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் சுமார் ஐந்து லட்சம் குழந்தைத் தொழிலாளர்களும் அடங்குவர்.

சர்வதேச தொலைத்தொடர்பு மற்றும் ஒழுங்கு முறை மேம்பாடு அமைப்பு, மின்கழிவுகளைக் குறைக்க முயற்சி எடுத்து வருகிறது. இந்த அமைப்பு, இந்த ஆண்டு இறுதிக்குள் மின்கழிவு மறுசுழற்சியை 30 வீதம் உயர்த்துவதையும், உலகில் மின்கழிவு சட்டங்களை பயன்படுத்தும் நாடுகளின் எண்ணிக்கையை 50 வீதம் உயர்த்துவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

மின்னணு கழிவுகளின் தாக்கத்தைக் குறைக்க பொதுமக்கள் மின்னணு சாதனங்களை பயன்படுத்தும் கால அளவை நீட்டித்துக் கொள்ளப் பழக வேண்டும். சந்தையில் புதிதாக வரும் கைப்பேசிகள் மற்றும் இதர மின்னணு பொருட்களை ஆடம்பரத்திற்காக வாங்கி விட்டு ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள மின்னணு பொருட்களை தூக்கி எறியும் பழக்கத்தைக் கைவிடவேண்டும்.

மின்னணு கழிவுகளை மறுசுழற்சி செய்யும் முறை குறித்து இளைஞர்கள், மாணவர்கள், தொழில் முனைவோர் ஆகியோரிடம் அரசு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

# தேசிய பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை வலுப்படுத்தவேண்டியது அவசியம்



கலாநிதி ஜெகான் பெரேரா

இதுகாலவரை தங்களது அதிகாரம், மதிப்பு மற்றும் சட்ட விலக்கு ஆகியவை காரணமாக தீண்டப்படமுடியாதவர்களாக கருதப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகள் மூவரை நேரடியாக பாதித்த கடந்த வாரத்தைய எதிர்பார்க்கப்படாத நிகழ்வுகள், தீர்க்கப்படாமல் இருக்கும் போர்க்கால மனித உரிமைகள் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையொன்றை அமைக்கும் அரசாங்கத்தின் யோசனைக்கு பெரும் ஊக்கத்தைக் கொடுக்கும். முதலாவது, முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்சவும் கோட்டாபய ராஜபக்சவும் பதவியில் இருந்த காலப்பகுதிகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்காக அவர்களுக்கு எதிராக தடைகள் விதிக்கப்படுவதாக கனடா அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்பாகும்.

கனடாவில் அவர்களுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு சொத்தும் முடக்கப்படமுடியும். அவர்கள் கனடாவுக்கு பயணம் செய்வதும் தடைசெய்யப்படும். முன்னர் மனித உரிமை மீறல்களைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகவே குறிப்பாக அமெரிக்காவினால் மட்டுப்படுத்தப்பட்ட பயணத்தடைகள் விதிக்கப்பட்டன.

இரண்டாவது எதிர்பார்க்கப்படாத நிகழ்வு 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான வழக்கில் உயர் நீதின்றம் வழங்கிய தீர்ப்பாகும். அந்த தாக்குதல்கள் இடம்பெற்ற நேரத்தில் அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த உயர்மட்ட உறுப்பினர்கள் விழிப்புடன் செயற்படவில்லை என்று குற்றஞ்சாட்டி பாதிக்கப்பட்ட குழுக்கள் தங்கள் சார்பிலும் பாதிக்கப்பட்ட ஏனைய மக்கள் சார்பிலும் வழக்குகளை தாக்கல் செய்திருந்தன. அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பாதுகாப்புத்துறையின் உயர்மட்ட உறுப்பினர்களும் தனிப்பட்ட முறையில் இந்த இழப்பீட்டை வழங்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த இழப்பீட்டுத் தொகை இலங்கையின் தராதரங்களின் பிரகாரம் நோக்கும்போது மிகவும் அதிவிசேடமானதாகும். ஒரு மைல் கல்லாக அமைந்திருக்கும் இந்த தீர்ப்பு தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவதில் அலட்சியமாக இருக்கும் அரச அதிகாரிகள் நீதித்துறையின் நடவடிக்கைக்கு உட்படவேண்டியவர்களாகிறார்கள் என்பதை காட்டுகிறது. எதிர்வரும் நாட்களிலும் மாதங்களிலும் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பொறுப்புக்கூறல் செயன்முறைகள் மேலும் உத்வேகம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

கனடாவின் தீர்மானம் அந்த நாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதில் அந்நாட்டு அரசாங்கம் காட்டிய அக்கறையின் விளைவானதாகவே இருந்திருக்கிறது எனலாம். புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதியொருவர் கனடா பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கிறார். ஏனைய மேற்கு நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்கள் இதே போன்ற நடவடிக்கைகளை தங்களது அரசாங்கங்கள் எடுக்கக்கூடியதாக செல்வாக்கு செலுத்துமளவுக்கு பெருவாரியானவர்களாகவோ அல்லது செல்வாக்கு கொண்டவர்களாகவே இல்லை.

ஆனால், சகல மேற்கு நாடுகளும் சர்வதேச நியாயாதிக்கக் கோட்பாட்டை ஆதரிக்கின்றன. இதன் மூலம் உலகின் எந்தப்பகுதியிலும் இடம்பெற்றிருக்கக்கூடிய மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் (அவற்றைச் செய்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும்) அந்த நாடுகளின் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட முடியும். அந்த நாடுகளின் பிரசைகள் தனிப்பட்ட முறையில் தங்களது முறைப்பாடுகளின் நம்பகத்தன்மைக்கான பூர்வாங்க சான்றாக கனடா அரசாங்கத்தின் தீர்மானத்தை பயன்படுத்தி வழக்குகளைத் தொடரமுடியும் என்பதே இதன் அர்த்தமாகும்.

இத்தகைய நாடுகளின் வரிசையில் இறுதியாக சேர்ந்திருக்கிறது அமெரிக்கா. உக்ரெய்ன் மீது ரஷ்யா படையெடுத்ததை தொடர்ந்து தோன்றிய சூழ்நிலைகளில், மனித உரிமை மீறல்களைச் செய்தவர்கள் பாதுகாப்பாக தங்கியிருக்கக்கூடிய ஒரு நாடாக அமெரிக்கா நோக்கப்படுவதை தடுக்கும் நோக்குடன் சர்வதேச சட்டத்துக்கு இசைவான முறையில் தனது சட்டக்கோவையை வாஷிங்டன் கொண்டு வந்திருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோசப் பைடன் இந்த மாதம் புதிய சட்டம் ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கிறார். சர்வதேச மனித உரிமைகளை மீறியதாக சந்தேகிக்கப்படுபவர்கள் அமெரிக்காவில் இருந்தால் - அவர்களோ அல்லது பாதிக்கப்பட்டவர்களோ எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அந்த மீறல்கள் எந்த நாட்டில் இடம்பெற்றிருந்தாலும் - சமஷ்டி நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்கு இந்த சட்டம் அமெரிக்க அரசாங்கத்துக்கு அதிகாரமளிக்கிறது. இலங்கையின் பல தலைவர்களின் குடும்பங்கள் அமெரிக்காவில் இருக்கின்றன. நிதிச் சொத்துக்களையும் அங்கு அவர்கள் பத்திரமாக வைத்திருக்கிறார்கள். கனடா அரசாங்கத்தின் தீர்மானத்தின் பின்புலத்தில் அமெரிக்காவில் கொண்டுவரப்பட்ட சட்ட மாற்றத்தினால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று இந்த தலைவர்கள் கவலைப்படுவார்கள்.

முன்னாள் ஜனாதிபதிகளை இலக்குவைத்து கனடா அரசாங்கம் விதித்திருக்கும் தடைகளில் ஒப்பீட்டளவில் கீழ்மட்டத்தில் உள்ள இரு இராணுவ அதிகாரிகளும் உள்ளடக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். மனித உரிமைகளை மீறியிருக்கக்கூடிய பரந்தளவு பிரிவினரை இந்தத்தடைகள் இலக்காகக் கொண்டுள்ன என்பதே இதன் அர்த்தமாகும். அந்த உரிமை மீறல்களில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களும் சம்பந்தப்படாதவர்களும் இதில் உள்ளடங்கியிருக்கலாம். ஆனால் உத்தரவுகளை வழங்குகின்ற தொடர் கட்டளை பொறுப்புக்களில் அவர்கள் இருந்திருக்கலாம்.

இதனால் இலங்கையின் பாதுகாப்பு படைகளில் உள்ளவர்கள் அல்லது பாதுகாப்பு நிறுவனத்தில் உள்ளவர்கள் மனதில் ஒரு பாதுகாப்பின்மை உணர்வு தோன்றும். சர்வதேச நியாயாதிக்கத்தின் அடிப்படையில் வழக்குகளை தொடுப்பதற்கு அனுமதிக்கின்ற நாடுகளில் வழக்குகளை எதிர்நோக்குவதில் இருந்து தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று அவர்கள் உணருவார்கள். தற்போது கூட போர்க்காலத்தில் படையணிகளில் சேவையாற்றிய ஆனால் எந்த விதமான குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகாத நற்பெயரைக் கொண்ட இராணுவ அதிகாரிகள் மனித உரிமைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் காரணமாக தங்களுக்கு பயிற்சிக்கான சர்வதேச வாய்ப்புக்களையோ அல்லது சர்வதேச சேவைகளில் பணியாற்றக்கூடிய வாய்ப்புக்களையோ பெறமடியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களைப் பொறுத்தவரை, பாதிக்கப்பட்ட மக்களோ அல்லது கத்தோலிக்க திருச்சபையோ இழப்பீட்டு மட்டத்துடன் அல்லது உயர் நீதிமன்றத்தின் மட்டுப்படுத்தப்பட்ட முடிவுகளுடனோ திருப்திப்படக்கூடிய சாத்தியம் இல்லை. குண்டுத்தாக்குதல்களின் பின்னணியில் இருந்திருக்கக்கூடியவர்கள் பற்றிய உண்மையை அறிய அவர்கள் விருப்புவார்கள். அத்துடன் எந்தளவு இழப்பீட்டை கொடுத்தாலும் அது மாண்டுபோன தங்கள் அன்புக்குரியவர்களின் உரியவர்கள் உயிரின் மதிப்புக்கு ஈடாகாது என்று அவர்கள் கூறுவார்கள்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து திருப்தியடைவதாக கத்தோலிக்க திருச்சபை ஏற்கெனவே கூறியிருக்கின்ற போதிலும், குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரிகள் நீதியின் முன் நிறுத்தப்படும் வரை அது தனது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை." உயர்நீதிமன்றத்தினால் வியாழக்கிழமை வழங்கப்பட்ட தீர்ப்பு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் இருக்கக்கூடிய உண்மையை கண்டறிவதில் மேலும் வெற்றிகளுக்கு வழிவகுக்கும் என்று நாம் நம்புகிறோம். தாக்குதல்கள் மீதான விசாரணைகள் தொடர்பில் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைக் காண நாம் விரும்புகிறோம். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஸ்கொட்லண்ட் யார்ட்டின் உதவியுடன் புதிய விசாரணையொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக தற்போதைய ஜனாதிபதியும் கூறினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை" என்று கார்டினல் மல்கம் ரஞ்சித் கூறினார்.

இதே போன்ற நிலைமையே மூன்று தசாப்த கால இனப்போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையிலும் காணப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை போரில் இழந்தார்கள். இந்த இழப்பு ஒரு இனத்துக்கு மாத்திரம் மட்டுப்பட்டத்க இல்லாமல் சகல சமூகங்களும் பாதிக்கப்பட்டன. ஆனால் தமிழர்களே கூடுதல் இழப்புகளைச் சந்தித்தார்கள்.

இவற்றில் சில சம்பவங்கள் விசாரிக்கப்பட்டன. இராணுவ நீதிமன்றங்களினால் விசாரிக்கப்பட்ட வழக்குகளில் குற்றச்செயல்களுக்காக இராணுவ அதிகாரிகள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிவில் நீதிமன்றங்களினால் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கினார். அதனால் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து கவலைகொண்டுள்ளார்கள். போர்காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கங்கள் அக்கறையில்லாத மனோபாவத்தையே வெளிக்காட்டி வந்திருப்பதுடன் அந்த பிரச்சினைகள் வேண்டிநிற்கும் கவனத்தையோ முன்னுரிமையையோ கொடுக்கத் தவறிவிட்டன.

**தேசிய பொறிமுறைகள்**

முன்னாள் ஜனாதிபதிகள் இருவருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் எதிராக கனடா அரசாங்கம் விதித்திருக்கும் தடைகள் மனித உரிமை மீறல்கள் விவகாரம் எந்தளவு பரந்த வீச்செல்லையக் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துகிறது. பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகள் உரியமுறையில் கையாளப்படவேண்டிய தேவையை அவை சுட்டிக்காட்டுகின்றன. அந்த பிரச்சினைகளை அலட்சியம் செய்யவோ நிராகரிக்கவோ முடியாது. அவை கிளப்பப்பட்ட பிறகு காணாமல் போய்விடாது. இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது (1983 --2009) திட்டமிட்ட முறையில் முழு அளவில் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக கனடா அரசாங்கம் விளக்கம் அளித்திருக்கிறது.

இலங்கையில் மனித உரிமைகளை மீறியவர்களுக்கு திட்டமிட்ட முறையில் சட்ட விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் போக்கு தொடருவதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான வாய்ப்புகளில் முன்னேற்றம் ஏற்படமுடியாமல் இருப்பதுடன் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளும் ஆபத்துக்குள்ளாகியிருக்கின்றன. அரசியல் தலையீட்டின் விளைவாக - குறிப்பாக முன்னாள் ஜனாதிபதிகள் கோட்டாபய ராஜபக்சவினதும் மகிந்த ராஜபக்சவினதும் காலங்களில் - போர்க்குற்றங்களைச் செய்ததாக நம்பகமாகக் கூறப்பட்ட பெருவாரியான முன்னாள் மற்றும் தற்போதைய அரச அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வேண்டுமென்றே கைவிடப்பட்டன அல்லது குற்றவாளியாகக் காணப்பட்டவர்களுக்கு எதிரான தீர்ப்புகள் செல்லுபடியற்றதாக்கப்பட்டன என்று கனடா கூறியிருக்கிறது.

உள்விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளை கட்டுப்படுத்த வேண்டுமானால் அரசாங்கம் அதன் உள்ளகப் பொறிமுறைகள் வலிமை வாய்ந்தவை என்றும் சர்வதேச தராதரங்களுக்கு இசைவானவை என்றும் காண்பிக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இலங்கையின் நீதித்துறை சுயாதீனமானது என்றும் செயலூக்கம் உடையது என்றும் சர்வதேச சமூகம் நம்புவதற்கு ஓரளவுக்கு உதவும். பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் விசாரணைக்கு எடுப்பதற்கு உயர் நீதிமன்றம் இணங்கியிருக்கிறது. ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுதி கூட்டத்தொடரில் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

தவறான பொருளாதார முகாமைத்துவம் மற்றும் ஊழல் மோசடிகள் நாடு எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகள். அவற்றுக்காக புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தையோ எதிர்க்கட்சிகளையோ குற்றஞ்சாட்ட முடியாது. இறுதியாக நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை படுமோசமான தோல்வியைச் சந்தித்தது என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். நிதி முறைகேடுகளுக்காகவும் தவறான பொருளாதார முகாமைத்துவத்துக்காகவும் குற்றஞ்சாட்டி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர்கள் மகிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச மற்றும் 36 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதியளித்திருப்பது முக்கியமான ஒரு திருப்புமுனையாகும். இந்த வழக்குகள் ட்ரான்ஸ்பரென்சி இனடர்நாஷனல் இலங்கைப் பிரிவினாலும் வேறுபலராலும் தொடுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதியை 203 ரூபாவாக நிர்ணயிப்பதற்கு நாணய சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விவகாரங்கள், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதில் காட்டிய தாமதம், வெளிநாட்டு செலாவணி கையிருப்பை பயன்படுத்தி 18 ஜனவரி 2022 ஆம் திகதி 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அரசாங்க பிணைமுறியை செலுத்தியமை ஆகியவை தொடர்பில் கணக்காய்வு செய்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

பொருளாதாரக் குற்றங்கள் விவகாரத்தில் உயர் நீதிமன்றம் ஒரு முன்னோடியான நடவடிக்கையை எடுக்குமேயானால் ஆட்சிமுறையில் பொறுப்பக்கூறலை நாடிநிற்கின்ற நாடுகளின் முன்னரங்கத்தில் இலங்கையும் இடம்பெறக்கூடிய சூழ்நிலை தோன்றும். அதன் மூலம் நாட்டின் நிருவாக மற்றும் அரசியல்பதவிகளை மனமுவந்து முன்வந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய தலைமுறையொன்று உருவாகி போராட்ட இயக்கம் நாடி நின்ற "முறைமை மாற்றத்துக்கு" வழிவகுக்கக்கூடியதாக இருக்கும். அத்தகைய சாதகமான மாற்றங்கள் மீண்டும் சர்வதேச ஆதரவு பெருமளவில் கிடைக்கவும் கடந்த பல தசாப்தங்களாக தாழ்ந்த மட்டத்துக்குச் சென்ற முதலீடுகள் வந்து குவியவும் வழிவகுக்கும்.

# தேசிய கொள்கை திட்டங்களுக்குள் மலையக மக்களை உள்வாங்குங்கள்!

## வடிவேல் சுரேஷ் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜன. 18

மலையக பெருந்தோட்ட மக்கள் அடிப்படை வசதிகளுடன் சுதந்திரமாக வாழக்கூடிய வகையில் தேசிய கொள்கைத் திட்டங்களுக்குள் அவர்களை உள்வாங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டில் கல்வி மற்றும் சுகாதாரத்துக்கென தேசிய கொள்கைத் திட்டங்கள் உள்ளன. ஆனால் பெருந்தோட்ட மக்கள் இந்த கொள்கைத் திட்டத்திற்குள் உள்வாங்கப்படவில்லை. இதற்காக இந்த மக்கள் தோட்ட கம்பனிக்காரர்களிடமே போக வேண்டியுள்ளது. இலங்கையில் 15 இலட்சம் பெருந்தோட்ட மக்கள் உள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் 25 மாவட்டங்களின் 10 மாவட்டங்களில் பெருந்தோட்ட மக்கள் இருக்கின்றனர். இந்த மாவட்டங்களின் பெருந்தோட்டங்களை மூன்று பேரே நிர்வகிக்கின்றனர்.

அந்தக் கம்பனிக்காரர்களுக்கு இந்த மக்கள் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளார்களா? அனைத்து தேர்தல்களிலும் வாக்களிக்கும் இந்த மக்களை ஏன் தேசிய கொள்கைக்குள் உள்வாங்க முடியவில்லை.

மின்சாரம், வீடு அமைத்தல், மலசல கூடத்தை அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக தோட்ட நிர்வாகத்திடம் அனுமதி பெற வேண்டியுள்ளது.

யுத்த காலத்திலும் பெருந்தோட்ட மக்கள் இந்த நாட்டுக்காக உழைத்தவர்கள். கோவிட் காலத்திலும் அவர்கள் வேலைக்கு போனார்கள். இவ்வாறானவர்களை ஏன் ஒதுக்க வேண்டும்.

இந்த சமூகத்தில் இருந்து படித்தவர்கள் உருவாகியுள்ளனர். இவர்களிடையே இன வாதம் கிடையாது. இலங்கையர்களாகவே வாழ்கின்றனர். இதனால் இந்த விடயத்தில் தீர்வு காண வேண்டும் என்று சபாநாயகரிடம் கேட்கின்றேன்.

70,000 ஹெக்ரெயர் காணிகள் பெருந்தோட்ட நிறுவனங்களிடம் பயன்பாடு இன்றி காணப்படுகின்றன. அந்த காணிகளுடன் மேற்கொள்ளப்பட்டிருப்பது மிகவும் பலவீனமான ஒப்பந்தமாகும். அதனால் வெற்றிடமாகி இருக்கும் காணிகளை மீள அரசாங்கம் கையகப்படுத்த கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி அமைச்சரவைக்கு முன் வைத்த பிரேரணை அமைச்சரவை அனுமதி அளித்தது.

இது சட்டமூலம் தயாரிப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதனால் இந்த காணிகளை அரசாங்கத்துக்கு மீள பெற்றுக் கொள்ள சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் - என்றார். (ஐ)

# தேர்தலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைச்சரவையில் முடிவு எடுக்கவில்லை!

## பாராளுமன்றில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஜன. 18

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அமைச்சரவையில் எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. கட்டுப்பணம் செலுத்தல் பணியில் இருந்து விலகுமாறு சுற்றறிக்கை வெளியிட நான் ஆலோசனை வழங்கவில்லை. அரச நிர்வாக அமைச்சின் செயலாளரை பதவி நீக்க முடியாது என அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர், பிரதமர் தினேஷ் குணவர்த்தன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சி தலைவர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம் எடுக்க வேண்டும். இருப்பினும் நாட்டின் நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கும் அமைச்சரவைக்கும் உண்டு.நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. கட்டுப்பணம் செலுத்தல் பணியில் இருந்து மாவட்ட செயலாளர்களை விலகுமாறு அமைச்சரவையில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு நான் ஆலோசனை வழங்கவில்லை. வெளியிட்ட சுற்றறிக்கையை செயலாளர் அன்றைய தினமே மீளப் பெற்றுக்கொண்டார். தவறான தகவல்களை அடிப்படையாக கொண்டு எதிர் தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

அரச நிர்வாக அமைச்சின் செயலாளரை பதவி நீக்க முடியாது.எதிர்க்கட்சி தலைவர் காலையில் இருந்து இவ்விடயம் தொடர்பில் மாத்திரம் கருத்துரைக்கிறார். தவறான கருத்துக்களை குறிப்பிட்டு நாட்டு மக்களை அவர் தவறாக வழிநடத்துகிறார்.

பேச்சளவில் மாத்திரம் ஜனநாயக கொள்கையை பின்பற்றும் எதிர்தரப்பினர் கடந்த கால சம்பவங்களை மீட்டிப் பார்க்க வேண்டும். நாட்டில் கடந்த ஆண்டு இடம்பெற்ற வன்முறை சம்பவங்களில் முன்னிலையில் இருந்து செயல்பட்டவர்கள் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட தயாராகவுள்ளார்கள் - என்றார். (ஐ)

# கனகராயன்குளம் விபத்து இரண்டு பேர் படுகாயம்!

வவுனியா, ஜன. 18

கனகராயன் குளம் ஏ-9 வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

பால்மா ஏற்றியபடி வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த வாகனமும், திருத்தப் பணிகளுக்காக வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரமும் மோதி விபத்திற்கு உள்ளாகின.

இதில் உழவு இயந்திரத்தின் இரண்டுஉதவியாளர்கள் காயம் அடைந்துள்ளனர். (ஐ)



கல்வி tv CHANNEL-1

**18.01.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**18.01.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வடக்கு-கிழக்கு பகுதிகளில் மரம் தனித்தே களமிறங்கும்!

## கூறுகிறார் மு.கா. பிரதித் தலைவர்

அம்பாறை, ஜன. 18

முஸ்லிம்களின் எதிர்காலத்ததையும், இருப்பையும் தீர்மானிப்பதற்கான அரசியல் முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அநேகமான மாவட்டங்களில் தனித்துமரச் சின்னத்தில் களமிறங்கவுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.



சம்மாந்துறை மத்தியகுழு உறுப்பினர்களுன் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்தித்து கலந்துரையாடும் நிகழ்வு சம்மாந்துறை ஜனாதி பதி விளையாட்டுத் தொகுதி மண்டபத்தில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நின்று கைப்பற்ற வேண்டும்.

முஸ்லிம்களின் ஒரே குரல் முஸ்லிம் காங்கிரஸ் தான் என்பதனை அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் உரத்துக் கூறவேண்டும்.

அனைத்து பேதங் களையும் மறந்து இந்தத் தேர்தலில் முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸினை பலப்படுத்தவேண்டும்.

இந்தத் தேர்தலில் முஸ்லிம் சமூகத்துக்கு இருக் கின்ற சவால்கள், சதிகள், ஆபத்துக்களை சரிவர விளங்கிக் கொள்ளாமல் எவரும் பிழையான தீர்மானங்களை எடுக்க வேண்டாம்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இம்முறை சம்மாந்துறை பிரதேச சபையின் ஆட்சியை முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும். அதற்கு சிறந்த நபர்களை வேட்பாளர்களாக களமிறக்கவுள்ளோம். எனவே, இத்தேர்தலில் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளுக்கு அப்பால் சம்மாந்துறை மக்கள் ஐக்கியத்தைக் கடைப்பிடித்து பெருந்தலைவர் அஷ்ரப் உருவாக்கிய நமது தேசிய விடுதலை இயக்கமான முஸ்லிம் காங்கிரஸை வெற்றி பெறச் செய்ய வேண்டும் - என்றார். (அ)

# நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்துக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை

## கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இனியபாரதி



அம்பாறை, ஜன. 18

அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்துக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. சம்பவம் தொடர்பான விசாரணைக்கு பொலிஸாருக்கு எந்த நேரத்திலும் ஒத்துழைக்க தயாராகவுள்ளதாக கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இனிய பாரதி என்றழைக்கப்படும் குமாரசாமி புஸ்பகுமார் தெரிவித்தார்.

அம்பாறையில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்கு தீ வைக்கவேண்டிய தேவை எனக்கில்லை. நீதிமன்றக் களஞ்சியத்துக்கு தீ வைக்கும் அளவுக்கு சின்ன ஆளும் நான் அல்லன்.நாட்டின் சட்டம் என்ன சொல்கின்றதோ நீதிமன்றத்துக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட்டால் சட்டம் என்ன கூறுகின்றது என்பதை நான் தெளிவாக அறிவேன்.2004 ஆண்டு நாங்கள் கண்ட கண்டவர்களின் கதைகளைக் கேட்டு செயற்பட்ட காலங்கள் போல் தற்போது செயற்பட தயார் இல்லை.ஏனெனில் நாங்கள் முதிர்ச்சியடைந்துள்ளோம்.

அதில் அரசியல் மற்றும் சட்ட நீதியாகவும் எமக்கு அனுபவம் உள்ளது.எனவே இவ்வாறான சம்பவத்துடன் பொய்யான பிரசாரங்கள் மூலம் என்னைத் தொடர்புபடுத்த வேண்டாம். உண்மை நிலையை அறிய வேண்டியவர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு மக்களுக்கு தெளிவ படுத்த முன்வரவேண்டும். அத்துடன் நான் இச்சம்பவம் இடம்பெற்ற பின்னர் தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அது உண்மைக்கு புறம்பானது. இச்சம்பவத்திற்கு பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளேன் -என்றார். (அ)



# சைக்கிள்கள் வழங்கல்

திருமலை, ஜன. 18

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் வலயக்கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்று, க.பொ.த. உயர்தரத்தில் கற்பதற்காக, சேனையூர், மூதூர், இலங்கைத்துறை முகத்துவாரம் மற்றும் பள்ளிக்குடியிருப்பு போன்ற இடங்களுக்குச் சென்று வரும் ஐந்து மாணவர்களுக்குத் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட உதவிக் கோரிக்கைக்கு இணங்க சேனையூர் மத்திய கல்லூரியின் 21ஆவது அணியினரால்

செயற்படுத்தப்படும் நண்பர்கள் கல்வி நலன்புரி அமைப்பினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

அதற்கமைய குறித்த அமைப்பின் பிரதிநிதியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருமான கோபகன், பாடசாலையின் உப அதிபர் பா.ரஞ்சித்குமார் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சைக்கிள்கள் வழங்கினர்.

(அ)

# ரத பவனியுடன் சிறப்பாக இடம்பெற்ற சுவாமி விவேகானந்தர் ஜெயந்திவிழா



மட்டக்களப்பு, ஜன. 18

இராமகிருஷ்ண மிஷ்னை ஸ்தாபித்த வங்கத்தின் சிங்கம் வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 161 ஆவது ஜெயந்தி தின விழா மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

சுவாமியின் திருவுருவப் படம் தாங்கிய ரத பவனி மட்டக்களப்பு கல்லடி பிரதான வீதி ஊடாக ஊர்வலம் வந்தது.

கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் மற்றும் பழைய மாணவர் இராமகிருஷ்ண மிஷன் அபிமானிகள் ஊர்வலத்தில் கலந்து கொண் டனர்.

அதைத்தொடர்ந்து கல்லடி மிஷன் குருகுலத்தில் விசேட யாகம்,ஹோமம், பூசை, பஜனை என்பன இடம்பெற்றன.

(அ)

# றவ்ழா ஹதீஜா அஹதியா பாடசாலை அங்குரார்ப்பண விழா காத்தான்குடியில்



மட்டக்களப்பு, ஜன. 18

காத்தான்குடி றவ்ழா ஹதீஜா அஹதியா பாடசாலை அங்குரார்ப்பண விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி ஸாவியா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அஹதியா பாடசாலையின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி விளக்கி கூறப்பட்டதுடன் றவ்ழா ஹதீஜா அஹதியா பாடசாலையின் செயற்பாடு அஹதியா பாடசாலையின் கல்வித் திட்டம் என்பன பற்றியும் தெரிவிக்கப்பட்டது.

பொறியியலாளர் எம்.ரஊப் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன முன்னாள் தலைவர் மௌலவி எம்.ஐ.ஆதம்லெவ்வை, மட்டக்களப்பு மாவட்ட அஹதியா சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எஸ்.எச்.ஸாஜஹான், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எல்.ஜூனைட், மௌலவி ஏ.ஜே.எம்.அமீன் பலாஹி உட்பட றவ்ழா

ஹதீஜா அஹதியா பாடசாலை ஆசிரியைகள், நிர்வாகிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது றவ்ழா ஹதீஜா அஹதியா பாடசாலை மாணவர்களின் கலை கலாசாரா நிகழ்வுகளும் இடம்பெற்றன. (அ)



# நேபாள விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்பு

காத்மண்டு, ஜன. 18

72 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளான நேபாள விமானத்தின் 'கறுப்பு பெட்டி' இராணுவத்தினால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கறுப்பு பெட்டி மேலதிக நடவடிக்கைகளுக்காக நேபாள சிவில் விமான அதிகார சபை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்தை சூழவுள்ள பிரதேசங்களில் இருந்து இதுவரை 68 உடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஏனைய நான்கு உடலங்கள் முற்றாக எரிந்து போய் இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மீட்கப்பட்ட உடலங்களின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்டு பிரேத பரிசோதனைக்காக அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

# ஆடைக்கடை பொம்மைகளின் முகம் தெரிவதும் மத விரோதம்!

## தலிபான்களின் குரூர கட்டுப்பாடுகள்

காபூல், ஜன. 18

தலிபான்களின் கீழ், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் முழுவதும் உள்ள பெண்களுக்கான ஆடைக் கடைகளில் உள்ள பொம்மைகளின் தலைப்பகுதி மூடப்பட்டே காட்சியளிக்கிறது.

பொம்மைகளின் தலைகள் சாக்குகளினால் அல்லது கறுப்பு பிளாஸ்ரிக் பைகளினால் மூடப்பட்டிருக்கும்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தூய்மையான ஆட்சியின் ஒரு சின்னமாக முகமூடி அணிந்த பொம்மைகளின் உள்ளன. ஆனால் ஒரு வகையில், அவை காபூலின் ஆடை வியாபாரிகளின் எதிர்ப்பு மற்றும் படைப்பாற்றலின் ஒரு சிறிய நிகழ்ச்சியாகும்.



ஆரம்பத்தில், தலிபான்கள் பொம்மைகளை முற்றிலும் தலை துண்டிக்க விரும்பினர்.

ஒகஸ்ட் 2021 இல் அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிய சிறிது காலத்திற்குப் பிறகு, தலிபான் துணை மற்றும் நல்லொழுக்க அமைச்சகம் அனைத்து பொம்மைகளையும் கடை ஜன்னல்களில் இருந்து அகற்ற வேண்டும் அல்லது அவற்றின் தலைகளை அகற்ற வேண்டும் என்று உத்தரவிட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மனித உருவத்தின் சிலைகள் மற்றும் உருவங்களை சிலைகளாக வழிபடலாம் என்பதால் தடை செய்யும் இஸ்லாமிய சட்டத்தின் கடுமையான விளக்கத்தின் அடிப்படையில் அவர்கள் இந்த உத்தரவை பிறப்பித்தனர். இருப்பினும் இது பெண்களை பொது பார்வையில் இருந்து வெளியேற்றும் தலிபானின் நிலைப்பாட்டுடனும் இணைத்துப் பார்க்கப்படுகிறது.

சில துணி விற்பனையாளர்கள் இணங்கினர். ஆனால் மற்றவர்கள் அதிருப்தியடைந்தனர்.

அவர்கள் தங்கள் ஆடைகளை ஒழுங்காகக் காட்ட முடியாது அல்லது மதிப்புமிக்க பொம்மைகளை சேதப்படுத்தவேண்டும் என்று அவர்கள் புகார் கூறினர். தலிபான்கள் தங்கள் உத்தரவைத் திருத்தினர். தலை துண்டிப்பதற்கு பதிலாக, பொம்மைகளின் தலையை மறைக்கும்படி கடை உரிமையாளர்களுக்கு உத்தரவிட்டனர்.

கடை உரிமையாளர்கள் தலிபான்களுக்குக் கீழ்ப்படிவதற்கும் வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கும் இடையில் சமநிலைப்படுத்தவேண்டியிருந்தது. இந்த பிரச்னைக்கு தீர்வாக அவர்கள், பொம்மைகளின் தலைகளை மறைத்தனர். நடுத்தர வர்க்க வணிகத் தெருவான லைசி மரியம் தெருவில் உள்ள புடைவைக் கடைகளில் தலைமறைக்கப்பட்ட பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (அ)

# ஜனாதிபதி ஜோ பைடனின் இல்லத்தில் விருந்தினர்களுக்கான பதிவேடு இல்லை

நியூயோர்க், ஜன. 18

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பிரத்தியேக இல்லத்தில் விருந்தினர்களுக்கான பதிவேடுகள் எவையும் இல்லை என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

தெல்வெயாரிலுள்ள இல்லத்திலிருந்து வகைப்படுத்தப்பட்ட அரச ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டதையடுத்து, அந்த இல்லத்துக்கு சென்று வந்தவர்களுடைய விவரங்களை பார்வையிட வேண்டுமென குடியரசுக் கட்சியினர் வலியுறுத்தியிருந்தனர்.

இந்தக் கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே வெள்ளை மாளிகை இதனை குறிப்பிட்டது.

ஜனாதிபதிகளின் பிரத்தியேக இல்லங்களுக்கு செல்பவர்களுடைய விவரங்களை பேணும் முறைமையொன்று இல்லை என வெள்ளை மாளிகையின் சட்டப்பிரிவு கூறியுள்ளது. வொஷிங்டனில் ஜனாதிபதி பைடன் முன்னர் பயன்படுத்திய அலுவலகம் மற்றும் தெல்வெயாரிலுள்ள பிரத்தியேக இல்லத்திலிருந்து குறைந்தது 20 அரசாங்க ஆவணங்கள் கைப்பற்றப்பட்டிருந்தன. (அ)

# 60 ஆண்டுகளில் முதல்முறையாக சீனாவின் மக்கள்தொகை வீழ்ச்சி!



பீஜிங், ஜன. 18

சீனாவின் மக்கள்தொகை 60 ஆண்டுகளில் முதல்முறையாக வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக, சீனாவின் தேசிய புள்ளியியல் பணியகம் தெரிவித்துள்ளது.

தேசிய பிறப்பு வீதம் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளதனை காட்டும் புள்ளி விவரங்கள், 1,000 பெண்களுக்கு 6.77 பிறப்புகள் உள்ளதாக காட்டுகின்றன.

2022இல் மக்கள் தொகை 1.4118 பில்லியன் என கூறப்படுகின்ற நிலையில், இது 2021ஆம் ஆண்டில் இருந்து 850,000 குறைந்துள்ளது.

2022ஆம் ஆண்டில் பிறப்பு வீதம் 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 7.52 ஆகக் குறைந்துள்ளது என்று சீனாவின் தேசிய புள்ளியியல் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இறப்புகள் கடந்த ஆண்டு முதல் முறையாக பிறப்புகளை விட அதிகமாக பதிவாகியுள்ளது. இது கடந்த 1976ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிக இறப்பு வீதத்தை பதிவு செய்துள்ளது

1,000 பேருக்கு 7.37 இறப்புகள் என புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இது முந்தைய ஆண்டில் 7.18ஆக இருந்தது.

# அடுக்குமாடி குடியிருப்பு மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்!

## உக்ரைனில் 35 பேர் மரணம்!!

கீவ், ஜன. 18

உக்ரைனின் டினிப்ரோ நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடம் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.



குடியிருப்புக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் நூற்றுக்கணக்கானவர்கள் சிக்கிக் கொண்டதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்பில் பல வீடுகள் சேதமடைந்தன.

நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர் என அதிபர் மாளிகையின் மூத்த அதிகாரி கைரிலோ திமோஷென்கோ கூறினார்.

உக்ரைன் அடுக்குமாடி குடியிருப்பில் நடைபெற்ற ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது.

இதில் 75 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், மாயமான 35 பேரை தேடி வருகிறோம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# ஆறு மாதக் குழந்தை, தாய் உட்பட ஒரு வீட்டில் 6 பேர் சுட்டுக்கொலை!

## அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சம்பவம்

கலிபோர்னியா, ஜன. 18

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள துலாரே நகரில் ஒரு வீட்டில், 6 மாத குழந்தை, தாய் உட்பட 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதோடு. சிலர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக பொலிஸார் தெரிவிக்கையில்- குழந்தையையும், 17 வயதுத் தாயையும் தலையில் சுட்டுள்ளனர். போதைப்பொருள் கும்பல் தாக்குதலில் ஈடுபட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம். இத்தாக்குதலில் இரண்டு பேர் ஈடுபட்டுள்ளனர். இது தற்செயலான தாக்குதல் அல்ல. ஒரு குடும்பத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த வீட்டில் கடந்த வாரம் போதைப்பொருள் தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர் -என்றனர். (அ)




# நியூசிலாந்து - இந்தியா ஒருநாள் தொடர் இன்று!

ஹைதராபாத், ஜன. 18

நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 ஒருநாள் போட்டி மற்றும் மூன்று இருபது - 20 போட்டி தொடர்களில் விளையாடுவதற்காக இந்தியா சென்றுள்ளது. ஒருநாள் தொடருக்கான நியூசிலாந்து அணியின் தலைவராக ரொம் லதாமும், இருபது - 20 ஓவர் தொடருக்கு சாண்ட்னரும் தலைவராக செயல்படுகிறார்கள்.

இந்தியா- நியூசிலாந்துக்கு இடையேயான 3 ஒரு நாள் போட்டித் தொடரில் முதல் போட்டி ஹைதரா பாத்தில் இன்று ஆரம்பமாகிறது.

சொந்த மண்ணில் இந்திய வீரர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அதற்கு சவால் விடுக்குமா நியூசிலாந்து அணி என்பது இன்று தெரியும். (ஐ)

# சதத்தில் சதம் அடிப்பாரா கோலி?

## சுனில் கவாஸ்கர் என்ன கூறுகிறார்!



மும்பை, ஜன. 18

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கரின் 100 சதங்கள் சாதனையை மற்றோர் இந்திய கிரிக்கெட் வீரரான விராட் கோலி முறியடிப்பாரா என்ற கேள்வி சுனில் கவாஸ்கரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் தனது பதிலை அளித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் சுமார் ஆயிரம் நாட்கள் சதம் பதிவு செய்ய முடியாமல் தடுமாறி வந்தார் விராட் கோலி. ஆனால், அண்மைய நாட்களாக அவர் 3 சதங்களை வெறும் 30 நாட்கள் இடைவெளியில் பதிவு செய்துள்ளார். அவர் கடைசியாக விளையாடிய 4 ஒருநாள் போட்டிகளில் 3 சதங்களை பதிவு செய்துள்ளார்.

“சச்சின் 40 வயது வரை விளையாடினார். அதற்கான உடல் திறனோடும் அவர் இருந்தார். கோலியும் உடல்தகுதியில் அதிக கவனம் செலுத்தி வருபவர். ஆண்டுக்கு 6-7 சதங்கள் வீதம் அவர் பதிவு செய்தால் அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளில் 100 சதம் என்ற மைல்கல்லை அவர் எட்டுவார். அதற்கு அவர் 40 வயது வரை விளையாட வேண்டும். அந்த வயதில் அவர் விளையாடினால் அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை” என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட், இருபது -20 மற்றும் ஒருநாள் என மொத்தம் 74 சதங்களை கோலி பதிவு செய்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் 27 சதங்கள், ஒருநாள் கிரிக்கெட்டில் 46 சதங்கள் மற்றும் இருபது -20 கிரிக்கெட்டில் 1 சதமும் பதிவு செய்துள்ளார். (ஐ)

# பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு புதிய பந்துவீச்சு பயிற்றுநர்!

ராஜஸ்தான், ஜன. 18

ஐ. பி. எல். 2023 பருவகாலத்தில் பஞ்சாப் அணியின் சுழல்பந்து வீச்சு பயிற்சியாளராக இந்திய முன்னாள் வீரர் சுனில் ஜோஷி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

16ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இந்த ஆண்டு ஏப்ரல்- மே மாதங்களில் நடக்கிறது.

இந்த ஆண்டுக்கான மினி ஏலம் கடந்த மாதம் கொச்சியில் நடைபெற்றது. இந்த ஏலத்தில் அணிகள் தங்களுக்கு தேவையான வீரர்களை ஏலத்தில் எடுத்தனர்.

இந்நிலையில் அந்த அணி முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதாவது அந்த அணியின் சுழல் பந்து வீச்சு பயிற்சியாளராக இந்திய முன்னாள் வீரர் சுனில் ஜோஷி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என கூறியுள்ளது.

பஞ்சாப் கிங்ஸ் அணியில் முன்பு அனில் கும்ப்ளே பயிற்சியாளராக இருந்தபோது அவருக்கு உதவியாள ராக சுனில் ஜோஷி பணியாற்றியிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.






# நியூசிலாந்துடனான போட்டி ஷ்ரேயாஸ் ஐயர் விலகினார்

புதுடில்லி, ஜன. 18

இந்தியா - நியூசிலாந்துக்கு இடையேயான ஒருநாள் போட்டியில் இருந்து காயம் காரணமாக ஷ்ரேயாஸ் ஐயர் விலகியுள்ளார்.

நியூசிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒரு நாள் போட்டிகள், 3 இருபது - 20 போட்டிகளில் விளையாடுகிறது.

இந்தியா - நியூசிலாந்துக்கு இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நாளை முதல் 24ஆம் திகதி வரை நடைபெறுகிறது. ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகியது.

இதில், இந்தியாவின் ஷ்ரேயாஸ் ஐயர் விலகுகிறார் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. முதுகுப் பகுதியில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக , ஷ்ரேயாஸ் ஐயர் விலகுகிறார் என்றும் அவருக்கு பதில் ரஜத் பட்டிதார் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மகளிர் ஐ. பி. எல். ஒளிபரப்பு உரிமை 4280 கோடி ரூபாய்க்கு ஏலம்போனது!




புதுடில்லி, ஜன. 18

மகளிர் ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரை ஒளிபரப்புவ தற்கான உரிமையை 951 கோடி இந் திய ரூபாய்க்கு - நம் நாட்டு மதிப் பில் 4,280 கோடி ரூபாய் வயகாம் 18 நிறுவனம் ஏலம் எடுத்துள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித் துள்ளது.

மகளிருக்கான ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரை முதன் முறையாக நடைபெறவுள் ளது. 5 அணிகள் கலந்து கொள்ளும் இந்ததொடரின் அனைத்து ஆட் டங்களும் மும்பையில் நடை பெறுகின்றன. இந்தத் தொடரில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் இம்மாத இறுதியில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது.

தொடர்ந்து போட்டிகளை மார்ச் முதல் வாரத்தில் நடத்துவ தற்கான முன்னேற்பாடுகள் செய் யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மகளிர் ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொட ரின் ஒளிபரப்பு உரிமைக்கான ஏலத்தை மும்பையில் நடத்தியது. ஏலத்தில் வயகாம் 18, டிஸ்னி ஸ்ரார், சோனி ஆகிய நிறுவனங்கள் கலந்துகொண்டன. இதில் அடுத்த 5 ஆண்டுகளுக்கு போட்டிகளை ஒளிபரப்புவதற்கான தொலைக் காட்சி மற்றும் டிஜிற்றல் உரி மையை வயகாம் 18 நிறுவனம் ரூ.951 கோடிக்கு ஏலம் எடுத்தது. இந்த வகையில் மகளிர் ஐ. பி. எல். இருபது- 20 கிரிக்கெட் தொடரில் ஒரு ஆட்டத்துக்கு ரூ. 7.09 கோடியை பி. சி. சி. ஐ-க்கு, வயகாம் 18 நிறுவனம் வழங்கும்.

ஆடவருக்கான ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரின் டிஜிட்டல் உரிமையை கடந்த ஆண்டு ஜூன் மாதம் வயகாம் 18 நிறுவனம் 23,758 கோடி இந்திய ரூபாய்க்கு ஏலம் எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# அரசமைப்பில் திருத்தம் வருவதால் இறுதித் தீர்வு உடனே வந்துவிடாது!

## சட்டபீட பேராசிரியர் சர்வேஸ்வரன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 18

உடனடியாக அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவருவதால், இனப்பிரச்னைக்கு இறுதித் தீர்வு ஒன்று வரப்போவதில்லை என கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனப்பிரச்னைக்கான தீர்வாக தமிழ் மக்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்கின்ற சமஷ்டி முறையிலான தீர்வு அல்லது அதைப் போன்ற முறையில் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு தீர்வாகும்.

ஆனால், இன்றுள்ள வினா என்னவென்றால், தற்போதைய அரசாங்கத்தின் அல்லது ஜனாதிபதியின் எஞ்சிய ஆட்சிக் காலத்துக்குள், இனப்பிரச்னைக்கு இறுதியான தீர்வாக அமையக்கூடிய சமஷ்டி முறையிலான தீர்வு என்பது எந்தளவு சாத்தியமாகும் என்பதாகும். அது மாத்திரமல்லாது, இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடும் முக்கியமாகும்.

அதாவது தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காணும் விடயத்தில் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்ற தீர்வொன்றை வழங்கும் விதத்தில் இந்தியா எந்தளவு அழுத்தங்களை பிரயோகிக்கும் என்பது கூட சந்தேகத்துக்கிடமான ஒன்றாகும்.



ஏனெனில், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்தியா தெரிவிக்கின்றதே தவிர, அதற்கு அப்பால் செல்வது தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கும் கருத்து என்பது தமிழ் மக்களை பொறுத்தமட்டில் முக்கியமான விடயமாகும்.

ஜனாதிபதியின் இந்த கூற்றை தமிழ் மக்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பது முக்கியமாகும். என்னை பொறுத்தவரை, தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கு தீர்வானது ஒரு படிமுறையிலே இருக்க முடியும்.

ஏனெனில், உடனடியாக அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவந்து, இனப்பிரச்னைக்கு இறுதித் தீர்வு ஒன்று வரப்போவதில்லை.

அதனால் இந்த சந்தர்ப்பத்தில் 'வைத்தால் குடுமி எடுத்தால் மொட்டை' என்ற நிலையில் தமிழ் மக்கள் இருக்க முடியாது.

அதனால் இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் விடயத்தின் முதலாவது படி நிலையாக, 13ஆவது திருத்தத்தின் அதிகார பரவலாக்கத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளனர்.

அவ்வாறு இல்லாவிட்டால் மாகாண சபை முறைமையும் இல்லாமல் செல்லும் நிலை தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும்.

அத்துடன் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி தெரிவிக்கின்றபோதும் அதில் இருக்கும் அனைத்து விடயங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்துவாரா என்ற கேள்வியும் எழுகின்றது- என்றார். (அ)



வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில்

# திறன்பலகை பயன்படுத்தல் பற்றி ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 18

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் இரட்ணம் பவுண்டேசன் நிதிப்பங்களிப்பில் வலிகாமம் வலயப்பாடசாலைகளைச் சேர்ந்த 60 ஆசிரியர்களுக்கான மேற்படி செயலமர்வு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இரு நாட்களாக நடைபெற்ற இச்செயலமர்வு ஆரம்ப கல்வி ஆசிரியர்களைக் கொண்ட தொகுதியினருக்கு ஒரு பிரிவாகவும் இடைநிலைக் கல்வியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பிறிதொரு பிரிவாகவும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் இயல்பூக்கம், ஆராய்வூக்கம்,உருவாக்கம் போன்றவற்றை ஊக்குவிப்பதுடன் அவர்களது ஆளுமைப் பண்புகளை வலுப்படுத்தும் முகமாக திறன் பலகைகளை தம் கற்பித்தல் செயற்பாடுகளில் பயன்படுத்தும் நுட்பமுறைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன் ஆசிரியர்கள் தாமே பாடவிடயங்களை தயாரிக்கும் முகமாக ஈ-கிளாஸ் மென்பொருள் பதிவேற்றம் செய்யப்பட்ட விரலிகளும் வழங்கப்பட்டமை சிறப்பான தோர் விடயமாகும்.

இவ்விருநாள் செயலமர்வில் வலயக்கல்வி பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. லாவண்யா சுகந்தன், அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், திறன் பலகை பெற்றுக்கொண்ட பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தம் கருத்துக்களை வழங்கினர். (அ)

# ஆசிரிய கலாசாலையில் தைப்பொங்கல் விழா







யாழ்ப்பாணம், ஜன. 17

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை முற்றத்தில் கலாசாலை நுண்கலை மன்ற ஏற்பாட்டில் நடைபெற்றது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க பெருந் தலைவருமாகிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

பொங்கல் செயற்பாடும் அதற்கான விளக்கங்களும் என்ற பொருளில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் செயன்முறை ரீதியாக ஆசிரிய மாணவர்களுக்கு விளக்கவுரை வழங்கினார்.

கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம் , யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

நுண்கலை மன்ற காப்பாளர் ரஜிதா சின்னத்துரை வாழ்த்துரை வழங்கினார். (அ)

# இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரை சந்தித்துப் பேசினார் இலங்கைத் தூதுவர்

புதுடில்லி, ஜன. 18

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட மற்றும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளின் பரஸ்பர உறவை பேணுதல், மீட்டெடுத்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இது இந்தியா - இலங்கை இடையே நடைபெறும் வழக்கமான உரையாடலின் ஒரு பகுதி என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வார இறுதியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கை வரத் திட்டமிட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், அதற்கு முன்னதாகவே இந்த சந்திப்பு நடந்துள்ளது.

எனினும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் பயணம் குறித்து இதுவரை அதிகாரபூர்வ தகவல் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 18

பேலியகொட - களுபாலம பகுதியிலுள்ள வீடு ஒன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் உயிரிழந்தார்.

நேற்று காலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், காயமடைந்த நபர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் கொலை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு சில வாரங்களுக்கு முன்னர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வசந்த முதலிகே தடுத்துவைப்பை முடிவுக்கு கொண்டுவரவேண்டும்!

## 7 சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 18

2022 ஒகஸ்ட் 8ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட மாணவர் செயற்பாட்டாளர் வசந்த முதலிகேயை தன்னிச்சையாக தடுத்து வைத்திருப்பதை இலங்கை அரசாங்கம் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என ஏழு மனித உரிமை அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஒகஸ்ட் 21ஆம் திகதி முதல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைசாத்திட்ட பயங்கரவாத தடுப்பு உத்தரவின் கீழ் அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டுக்கான ஆசிய மன்றம், சிவிகஸ், முன்னணி பாதுகாவலர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை தொடர்பான சர்வதேச செயற்குழு மற்றும் சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை பிரசாரம் என்பனவே இந்த கோரிக்கையை விடுத்துள்ளன. (அ)

## கடன்...

டுத்து வரும் நிலையில் அந்தப் பேச்சுகள் வெற்றியளித்திருப்பதாக நான் இந்த சபைக்கு அறிவிக்க முடியும்.

சம்பளம் வழங்குவது எமது பிரதான செயல்பாடாகும். இரண்டாவது இடத்தில் ஓய்வூதியம் வழங்குவது உள்ளது. சமுர்த்தி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இவற்றுடன் மேலதிகமாக இன்னும் இரண்டு வேலைதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அதேநேரம் அதற்காகவும் நாம் நிதியை பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது.

நாம் மருந்துக்காக நிதியை பெற்றுக் கொடுப்பதில்லை என்று தற்போது எம் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் 10 கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டும். உண்மையில் சுகாதாரத் துறையில் ஒரு பிரச்னை உள்ளது. அது கடந்த சில வருடங்களின் நிலுவையாக 5 ஆயிரம் கோடி ரூபாயை செலுத்த வேண்டியுள்ளது. எனினும், அவசியமான மருந்தை பெற்றுக்கொடுப்பதற்காக நாம் இவ்வருடம் 3 ஆயிரம் - 4 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

என்றாலும், மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சில காலம் எடுக்கும். எமது மருத்துவமனைகளில் பற்றாக்குறை நிலவுவதையோ அதேபோன்று மருந்துகள் இல்லாமல் மக்கள் உயிரிழப்பதையோ நாமும் விரும்பவில்லை. அதனால் அந்த வேலைத்திட்டத்துக்கு அவசியமான நிதியை நாம் ஒதுக்கியுள்ளோம்.

கடந்த வருடம் எமது நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. இவ்வருடமும் உணவுப் பற்றாக்குறை ஏற்படுமென நாம் எதிர்பார்க்கின்றோம். எவ்வாறாயினும் நாம் விவசாயிகளுக்கு அவசியமான உரத்தை பெற்றுக்கொடுத்தோம். தற்போது எமக்கு மேலதிகமான அறுவடை கிடைத்துள்ளது. கடந்த பெரும்போகமும் சிறு போகமும் வெற்றிபெற்றதன் காரணமாகவே எமக்கு இந்த மேலதிக நெல் கையிருப்புக் கிடைத்துள்ளது. தற்போது நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு கிலோ நெல்லின் விலையை 100 ரூபாயாகப் பேணிவருவதாகும். இதற்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாம் 75வது சுதந்திரதின நிகழ்வைக் கொண்டாடவுள்ள இந்த சந்தர்ப்பத்தில் மக்களை பசியில் வாடுவதற்கு அனுமதிக்க முடியாது. அதற்கு அவசியமான நிதியை நாம் பெற்றுக் கொடுப்போம். சுதந்திர தினத்துக்காக நிதியை விரயம் செய்வதாக பலரும் குற்றம் சாட்டுகின்றனர். எனினும், நாம் மக்களுக்கு இது போன்ற நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மேலும், சில புதிய சட்டங்களைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம். பெண்கள் சட்டம் தொடர்பிலான தேசிய ஆணைக்குழு, பாலின சமத்துவ சட்டம், பெண்கள் வலுவூட்டல் சட்டம், ஆகிய இந்த 3 சட்டங்களைக் கொண்டு வந்தால், தெற்காசியா விலேயே பெண்களின் பாதுகாப்புக்காக அதிக நடவடிக்கைகளை மேற்கொண்ட நாடாக நமது நாடு திகழும்.

இயற்கை வளப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் மகாவலி கங்கை, சிங்கராஜ வனம் , சிவனொளிபாத மலை, ஹோர்டன் சமவெளி, நக்கிள்ஸ், இராமர் பாலம் ஆகிய இடங்களுக்கு பாதுகாப்பு உரிமைகள் வழங்கப்படும். மேலும், நாம் சமூக நீதி தொடர்பான ஆணைக்குழுச் சட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம். இந்தத் திட்டங்களுக்கு மேலதிகமாக, இந்த ஆண்டு 75 நகர்ப்புற காடுகளை உருவாக்குவதற்கும், தேசிய இளைஞர் தளத் திட்டத்துக்கும் பணம் ஒதுக்க வேண்டும்.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை காணப்பட்டாலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நாம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். இந்த 75 ஆவது சுதந்திர தினத்தையொட்டி, நமது அரசியல் முறையை நாம் இப்போது மாற்றுவோம் என்று எதிர்க்கட்சியிடம் கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

## பொலிஸ், காணி...

தெரிவிக்கையில்-

வீடொன்று பற்றியெறியும்போது சுருட்டை பற்றவைத்ததைப் போன்று, இன்று சில தமிழ்க் கட்சிகளும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் ஒரு சில சர்வதேச நாடுகளும் செயற்பட்டு வருகின்றன.

நாடு இன்று பொருளாதாரப் பிரச்னைக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், நாட்டைத் துண்டாட, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்த அவர்கள் முயற்சித்து வருகிறார்கள்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதிக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறார்கள்.

இந்து - லங்கா ஒப்பந்தத்துக்கு இணங்க, வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைத்து ஒரு வருடத்துக்குள் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு செல்ல வேண்டும் என்றே கூறப்பட்டிருந்தது. அது 13ஆவது திருத்தசட்டம் கிடையாது.

அத்தோடு, இந்த ஒப்பந்தத்தில் அதிகாரத்தை பரவலாக்கல் தொடர்பாகக் கூறப்படவில்லை.

அப்படியிருக்கையில், எவ்வாறு 13 ஆவது திருத்தச்சட்டம் வந்தது? இது இந்தியாவின் தேவைக்காக எம் மீது சுமத்தப்பட்ட ஒன்றாகும்.

இந்த சிறிய நாடு 9 மாகாணங்களாக பிரிந்து செயற்படவேண்டிய அவசியம் கிடையாது.

அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உள்ளன. அங்கு மேற்கு வெர்ஜீனியா மாநிலமானது இலங்கைளவு பரப்பளவைக் கொண்ட மாநிலமாகும்.

அதேபோன்று அமெரிக்காவின் அலஸ்கா மாநிலமானது இலங்கையை விட பாரிய மாநிலமாகும்.

இப்படியான மாநிலங்களைக் கொண்ட ஒரு நாட்டில்தான் சமஷ்டி முறைமை தேவைப்படுகிறது.

அதைவிடுத்து இலங்கை போன்றதொரு சிறிய நாட்டை சமஷ்டியாக்க முற்படுவதானது, இலங்கையை பிரிக்கவேயாகும். இலங்கையென்பது ஒற்றையாட்சி முறைமை கொண்ட நாடாகும்.

69 இலட்சம் மக்கள் வாக்களித்து, எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை மக்கள் வழங்கியிருப்பதானது, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்துவதற்கல்ல.

மாறாக ஒற்றையாட்சியை பாதுகாத்து நாட்டை முன்னேற்றவே என்பதை அனைவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

எனவே, 13 ஐ அமுல்படுத்தி, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்தும் தமிழ்க் கட்சிகளின் முயற்சிகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். 13 ஐ நாம் இப்போதும் நடைமுறைப்படுத்தி தான் வைத்துள்ளோம்.

ஆனால், பொலிஸ்,காணி அதிகாரங்களை வழங்கி ஐக்கிய இலங்கையை பிரிக்க நாம் என்றும் இடமளிக்கப் போவதில்லை-என்றார். (அ)

## தாக்குதலுக்கு...

பில் அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு-

தமிழர் தாயகப் பகுதியான யாழ்ப்பாணத்தில், தேசிய பொங்கல் எனும் பெயரில் ஜனாதிபதி ரணில் தமிழர் திருநாளாம் பொங்கல் தினத்தில் சர்வதேசத்துக்கும் சிங்கள மக்களுக்கும் அரங்கேற்றப்பட்ட நாடகத்தை தோலுரித்துக் காட்டும் விதமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட அமைதிவழி பேரணியில் கலந்துகொண்ட வயோதிபத் தாய்மார்கள், சிறுவர்கள், பெண்கள், மதத்தலைவர்கள் மற்றும் மாணவர்கள் மீது பொலிஸாரினாலும், விசேட அதிரடி படையினராலும், இராணுவத்தினராலும் மேற்கொள்ளப்பட்ட வன்முறை பிரயோகம் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். என்றுள்ளது.

இந்த கண்டன அறிக்கையில் வடக்கு, கிழக்கை சேர்ந்த மதத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒப்பமிட்டுள்ளனர். (ஐ)

## இனப் பிரச்னை...

சமூக செயல்பாட்டாளர்கள் ஒப்பமிட்டுள்ளனர். அதில், இத்தீவின் தேசிய இனப்பிரச்னைக் கான தீர்வு என்பது இந்த உத்தரவாதங்களைத் தருவதாகவே எப்போதும் இருக்க வேண்டும். கடந்த காலத்தில் இடம்பெற்றவற்றிலிருந்து தமிழினம் கற்ற பாடங்களை முன்னுதாரணமாக கொண்டு செயல்பட வேண்டும்.

முதலில், பேச்சுகளுக்கான தெளிவான வழிவரைபடம் ஒன்றை இரு தரப்புகளும் இணைந்து தயாரிக்க வேண்டும். இது, பிரதானமாக முக்கிய அடைவுகள், அவற்றுக்கான நேர அட்டவணை என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும், பேச்சுகள், இனவழிப்பின் விளைவுகளாக தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்குகின்ற பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுகள், இறுதி அரசியல் தீர்வுக்கான பேச்சுகள் என இரண்டு தளங்களில் சமாந்தரமாக நடத்தப்பட வேண்டும்.

மேலும், தமிழ்த் தேசத்துடன் பேசுவது போலவே இத்தீவில் வாழும் முஸ்லிம்கள் மலையகத் தமிழர்கள் பறங்கியர், மலாயர் போன்ற சமூகங்களுடனும் அரசு பேச்சு நடத்துவதுடன் ஏனைய சமூகங்களுக்கு எதிராக இந்நாட்டில் புரையோடிப் போயுள்ள பௌத்த - சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிரான முழுமையான நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## தேர்தலை...

கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் அநுரகுமார திஸநாயக்க ஆகியோரே மேற்கண்டவாறு கூறினர். அத்துடன், நாட்டை மேலும் வங்கு ரோத்து நிலைக்குத் தள்ளுவதற்கே அரசு முயக்கின்றது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண இந்த அரசு எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

மின்கட்டணத்தை மேலும் உயர்த்துவதில் அரசு உறுதியாக உள்ளது. இதனால், பல தொழில்சாலைகள் மூடப்படும். பொருளாதாரம் மேலும் பின்னடையும். நடக்கவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலில் அரசு நிச்சயம் படுதோல்வியடையும். - என்றனர். (ஐ)

## வசந்தவுக்கு...

வசந்த முதலிகே சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனு தொடர்பான உத்தரவை எதிர்வரும் 31ஆம் திகதி வழங்குவதாக பிரதம நீதிவான் பிரசன்ன அல்விஸ் அறிவித்துள்ளார்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் வசந்த முதலிகே கடந்த ஆண்டு ஓகஸ்ட் 18ஆம் திகதி கைது செய்யப்பட்டார். பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிறப்பித்த தடுப்புக் காவல் ஆணையின் கீழ் முதலிகே தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்முனை...

உயர் நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் மகிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தது.

இந்த தடை உத்தரவு நாளை வியாழக்கிழமை வரை அமுலில் இருக்கும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் பிறப்பிக்குமாறும் நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ)

## தமிழ் மொழிமூல...

செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, எதிர்க் கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் 26 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற 8 ஆயிரம் ஆசிரியர்களையும் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூன்றாம் தவணை நிறைவடைவதற்கு முன்பதாக எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதிக்கு முன்னர் அந்த நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். - என்றார். (ஐ)

## உண்மை...

தீனமான, உள்ளூர் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சரவை தீர்மானத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னர் மீளிணைப்பு தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் சில ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையுள்ளது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இதன்பொருட்டு ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர் , கல்வி அமைச்சர், நீதி அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை தீர்மானத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழரசின்...

கள் மட்டுமே பதவியில் இருக்கப் போகும் யாழ். மாநகர முதல்வரை தெரிவு செய்வதற்கான தெரிவு நாளை வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், தமிழரசுக்கட்சி சார்பில் யாழ். மாநகர முதல்வர் வேட்பாளராக யாரை தெரிவு செய்வது என்பதில் தமிழரசு கட்சிக்குள் வேறுபட்ட கருத்து நிலவியது. இதனால், அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், தமிழரசு கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் பங்கேற்றனர். இதன்போது யாழ். மாநகர முதல்வர் வேட்பாளரை தெரிவு செய்வதில் தமிழரசு கட்சிக்குள் வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

சொலமன் சிறில், இமானுவேல் ஆனல்ட் ஆகியோரின் பெயர்கள் முதல்வர் தெரிவுக்கு முன்வைக்கப்பட்டதால் கூட்டம் இணக்கமின்றி முடிந்தது. (ஐ)

## மாதம் ரூ. 9.5...

அமைய இந்த தகவலை நேற்றைய தினம் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தைக் கூட வழங்க முடியாத சூழ்நிலையில் இவ்வாறான செலவை மேற்கொள்வது தொடர்பில் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

நாட்டின் ஒட்டுமொத்த செலவினங்களைப் பார்க்கும் போது இது ஒரு சிறிய செலவு மட்டுமே. 1977ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் செலவு வருமானத்தை விட அதிகமாக உள்ளது. அன்றாட செலவுகளுக்கு போதிய வருமானம் இல்லாத நாடாக நாம் வந்துள்ளோம். இந்த சிறிய செலவுகளைப் பார்க்கும் முன், பெரிய அளவிலான செலவுகளைப் பார்க்க வேண்டும். அதாவது அரச ஊழியர் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் கடன் வட்டி செலுத்துதல். இந்த பெரிய அளவிலான திட்டங்களில் எதையும் குறைக்க முடியாது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## இலங்கை கடன் மறுசீரமைப்பு; இந்தியா முழுமையான ஆதரவு

கொழும்பு, ஜன. 18

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு இந்தியா ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளதாக புளூம் பேர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் 2.9 பில்லியன் டொலர் நிதி நிவாரணத்தை பெறுவது இலகுவாக இருக்கும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியா தனது நிலைப்பாட்டை கடந்த திங்கட் கிழமை வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க் கப்படுவதாக கூறியுள்ளார். (அ)

## நாணய நிதிய அங்கீகாரம் முதல் காலாண்டில் கிட்டும்

### இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, ஜன. 18

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரத்தை இலங்கையினால் பெற முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை சாதகமான முடிவு களைப் பெறத் தொடங்கியுள்ளதாக அவர் நேற்று பாரா ளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாணய நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடன் ஜனாதிபதி உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடு வார் என்று அமைச்சர் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி தொலவத்த எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். (அ)

## மொட்டுக் கட்சிக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டவேண்டும்

### கோருகின்றார் சந்திரிகா

கொழும்பு, ஜன. 18

எதிர்வருகின்ற தேர்தல்கள் எதுவாக இருந்தாலும் அதில் மொட்டுக் கட்சிக்குச் சரியான பாடத்தை மக்கள் புகட்டவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

சுயாதீனமாகச் செயற்பட்டு வரும் மொட்டுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர்களான அனுரபிரிய தர்சன

யாப்பா, சந்திம வீரக்கொடி ஆகிய இருவரும் அண் மையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இதன்போதே சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார் என தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது சுதந்திரக் கட்சியின் தலை வர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திரிகா கடுமையாக விமர்சித்தார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

## சேபால் அமரசிங்கவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன. 18

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப் பட்ட சமூக ஊடக ஆர்வலர் சேபால் அமரசிங்கவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப் பட்டுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பௌத்த மதத்தின் புனிதத்தை அவமதிக்கும் வகை யில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டின் அடிப்படை யில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சேபால் அமர சிங்க கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியர்களுக்கு எப்படியும் சம்பளம் கொடுத்து விடுவோம்!

## சபையில் கூறினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜன. 18

**அரச ஊழியர்களுக்கு ஒரே நாளில் சம்பளம் வழங்க முடியாவிட்டாலும் இன் னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரி வித்தார்.**



எதிர்பார்த்த வருமானம் ஒரேயடியாக கிடைக் காவிட்டாலும், கடந்த மாதங்களுடன் ஒப்பிடும்போது, தற்போது பொருளாதாரம் சரியான பாதையில் பயணித்து வருவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில மாதங்களைப் பார்க்கும்போது, தற் போது பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக நாங்கள் பணியாற்றி வருகி றோம். இப்போது இந்தியா மற்றும் சீனாவின் ஒப்பந் தத்தைப் பெறவேண்டும். இதுவரை நடந்த விவாதங்கள் வெற்றி பெற்றுள்ளன என்றே கூற வேண்டும். எதிர்காலத்தில் அது பற்றிய பதில் கிடைக்கும்.

நாம் எதிர்பார்க்கும் வருமானம் ஒரேயடியாக கிடைக்காது. ஒரே நாளில் சம்பளம் கொடுக்க முடியா விட்டாலும், இரண்டு மூன்று நாட்களில் கொடுக்கப் படும்-என்றார். (அ)

## நாணயத்தாள்களை அச்சிடுவது நிறுத்தம்

கொழும்பு, ஜன. 18

சமகால அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக நாணயத்தாள்களை அச்சிடுவது தற்போது நிறுத்தப் பட்டுள்ளதாக வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும், அமைச்சரவை பேச்சாள ருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடை பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சந்தர்ப்பத்தில் எம்மால் கடனை பெற்றுக் கொள்ள முடியாது.

வெளிநாடுகளில் பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பி செலுத்துவது தொடர்பில் கடன் மறுசீர மைப்புக்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இந்த நாடுகளிடம் நாம் கேட்டுக்கொண்டுள்ளோம்.

இதனால் மேலும் கடன் வாங்க முடியாது. பணத்தை அச்சடிக்க முடியாது. நாணயத்தாள்களை அச்சடித்தால் எதிர்காலத்தில் கடனை பெற்றுக்கொள்ள முடியாது.

திருப்பிச் செலுத்தப்படாத கடனுக்காக நாணயத் தாள்களை அச்சிடுவதை அரசாங்கம் கொள்கை ரீதியில் நிறுத்தி இருக்கிறோம்.

இதனால் அன்றாட செலவுகளை சமாளிக்க முடியாத பெரும் நெருக்கடி நிலை எதிர் நோக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதத்தில் செலவுகள் எவ்வாறு சமாளிக் கப்பட்டது என்பதை நிதி அமைச்சின் செயலாளரிடம் வினவப்பட்டது. புள்ளிவிவரத் தரவுகளை வழங்கு மாறு கோரினோம்.

திறைசேரிக்கு 141 பில்லியன் ரூபா கிடைத்துள்ளது. இதில் சம்பளத்திற்காக 88 பில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு தேவையான மருந்துகளுக்கு 8.7 பில்லியன் ரூபா. தினசரி பயணச் செலவுகள் போன்ற நிர்வாகச் செலவுகள் 154 பில்லியன் ரூபா.

மொத்த வருமானம் 141 பில்லியன் ரூபா. ஆனால் செலவு 154 பில்லியன் ரூபா இதனைச் சமாளிப்பது எவ்வாறு? மாற்று வழியை கண்டறிவது கடினம்-என் றார். (அ)

## ஆசிரியர் இடமாற்றம் இனி புதிய நடைமுறை

கொழும்பு, ஜன. 18

ஒன்லைன் முறையில் ஆசிரியர் இடமாற்ற செயற் பாட்டை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக மனித வள முகாமைத்துவ கட்டமைப்பின் சரியான தகவல் களை ஆசிரியர்கள் உறுதிப்படுத்தவேண்டியது அவசிய மாகும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இந்த கட்டமைப்பில் சேர்க்கப்படும் ஆசிரியர்களின் தனிப்பட்ட மற்றும் சேவைத் தரவுகளை அடிப்படை யாகக் கொண்டு எதிர்காலத்தில் ஒன்லைன் மூலம் இடமாற்ற செயற்பாடு இடம்பெறும்.

இதனை துரிதமாகவும் முறையாகவும் முன்னெடுப் பதற்கு இவ்வாறான தகவல்கள் நாளாந்தம் இற்றைப் படுத்தப்படவேண்டும்.

அதனால் இவ்வாறான விடயங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டால் வலய கல்விப்பணிப்பாளருக்கு அறிவிக்கவேண்டும் என கல்வியமைச்சு ஆசிரியர்களை கேட்டுள்ளது. (அ)

## புதிய பயிற்சிநெறிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 18

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தற்காப்பு கலை, யோகா, சதுரங்கம், பூப்பந்தாட்டம் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் இரு பாலாரும் பங்கேற்க முடியும். இந்தப் புதிய பயிற்சி நெறிகள் பெப்ரவரி மாதம் ஆறு இறுதி நாட்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் இதில் பங்கேற்க முடியும். (ஐ)

## காதலை முறிக்கக்கூறியதால் காதலியை கொன்ற காதலன்!

### தலைநகர் கொழும்பில் துயரம்

கொழும்பு, ஜன. 18

கொழும்பு - குதிரை பந்தயத் திடலில் பல்கலைக் கழக மாணவி ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அவரின் காதலனை பொலிஸார் கைது செய்துள்ளனர். பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளை முடித்துக் கொண்டு நேற்றைய தினம், தனது காதலனி டம் பேசுவதற்காக குதிரை பந்தயத் திடலுக்கு சென்றுள் ளார். அவரின் காதலனும் கொழும்பு பல்கலைக்கழகத் தில் மூன்றாம் ஆண்டில் கற்று வருகிறார்.

இந்நிலையிலேயே, அவரின் காதலன் யுவதியின் கழுத்தை கத்தியால் வெட்டிக் கொலை செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. உயிரிழந்த யுவதி கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனது காதலனிடம் உறவை முறித்துக் கொள்ளுமாறு யோசனை கூறியுள்ளார்.

தனது காதலி வேறொருவருக்கு சொந்தமாகிவிடுவார் என எண்ணி அவர் கொலை செய்துள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

(முன்னர் வந்த செய்தி ஒன்று உள்ளே)

## கோட்டாபயவை போன்று ரணிலை விரட்ட முடியாது!

### ஹிருணிகா சொல்கிறார்

கொழும்பு, ஜன. 18

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்றியமை போல், ரணில் விக்ரம சிங்கவை பதவியில் இருந்து வெளியேற்ற முடியாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்கவை மூளையை பயன்படுத்தியே வெளியேற்ற வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்தாத சகல சூழ்ச்சிகளையும் சதிகளையும் தற்போதைய ஜனாதிபதி பயன்படுத்தி வருகிறார்.

இந்த மாத இறுதிக்குள் மக்களின் பொருளாதார நெருக்கடிகள் அதிகரிக்கும் எனவும், மக்கள் வீதிக்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.